# செம்மணி

நிலம் 3 துகள் 110 வள்ளுவர் ஆண்டு 2052, 27 ஆவணி - 02 புரட்டாதி 2022 வாரமலர் பக்கங்கள் 25


# தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கேட்டு ஜெனீவாவில் ஐப்பசி 12 தமிழர் மாநாடு

## இனப்படுகொலைக்கு எதிரான கூட்டமைப்பு அறிவிப்பு

ஈழத் தமிழர் இனப்படுகொலைக்கு நீதி கேட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அடுத்த மாதம் 12ஆம் நாள் சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனீவாவில் மாநாடு ஒன்றை நடத்தப் போவதாக இனப் படுகொலைகளுக்கு எதிரான கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் வாழும் நாடுகள் அனைத்திலிருந்தும் இந்த மாநாட்டிற்காகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரள்வார்கள் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

ஈழத்தில் இருந்தும் ஈழத்துக்கு ஆதரவான நாடுகளில் இருந்தும் அரசியல் தலைவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இன உணர்வாளர்கள்

பக்கம் 02

# கடன் வழங்குநர்கள் மாநாட்டை கூட்டி பேச்சு நடத்த ஜப்பானிடம் கோரிக்கை

## விடுத்தது இலங்கை

இலங்கையின் கடன் வழங்குநர்கள் மாநாட்டைக் கூட்டும்படி ஜப்பான் நாட்டிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது. ஜப்பானும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும் கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்குச் சீனாவைச் சம்மதிக்க வைப்பது இலகுவான காரியமல்ல என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முயற்சித்து வரும் இலங்கை அதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் கடனுதவியை எதிர்பார்த்துள்ளது.

பக்கம் 03

# டீசல் இறங்கத் தாமதம் அதனால் மீண்டும் வரிசை

இலங்கைக்கு வந்து சேர்ந்த எரிபொருள் கப்பலில் இருந்து டீசல் இறங்குவதததற்குத் தாமதமானதன் காரணமாகவே கடந்த ஓரிரு தினங்களாக எரிபொருளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று அமைச்சர் காஞ்சன விஜேயசேகர.

சுப்பர் டீசலுடன் வந்த டைந்த கப்பலிற்கான கொடுப்பனவைச் செலுத்துவதில் வங்கி காட்டிய தாமதம் காரணமாக எரிபொருளை இறக்குவது தாமதித்தது. இந்தச் செய்தி பரவியதும் மக்கள் டீசலை அடித்து வைப்பதில் திடீர் ஆர்வம் காட்டினர். அதையடுத்து நிரப்பு நிலையங்களில் மீண்டும் வரிசை ஏற்பட்டது. மக்கள் நீண்ட நேரம்

பக்கம் 02

# அனைத்துக் கட்சிகள் அடங்கிய ஆட்சிக்கான முயற்சி தோல்வி

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்தக் கட்சிகளுடன் நடத்தி வந்த பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை என்று தெரிகிறது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பெரமுனவின் டலஸ் பிரிவு, இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்புகளுடனும் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தியிருந்தார். ஆனால் அதன் முடிவுகள் அனைத்துக் கட்சி அரசு ஒன்றை அமைப்பதற்குச் சாதகமானதாக இல்லை என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

இந்தப் பேச்சுக்களின்போது

பக்கம் 03

# சிறையிலிருந்தது ரஞ்சன் விடுதலை தேசியப் பட்டியல் எம்.பியும் ஆகலாம்

## ஆனால், உடன் எந்தக் கட்சியிலும் இணையப் போவதில்லை என அவர் அறிவிப்பு



சிறையில் இருந்தது விடுதலையாகியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. எனினும் தாம் இப்போதைக்கு எந்தக் கட்சியுட னும் இணைந்து அரசியலில் ஈடுபடப் போவதில்லை

பக்கம் 03

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# மக்களின் நிலைதான் பரிதாபத்திற்குரியது

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது குறித்த முயற்சிகள் அவ்வளவு இலகுவானதல்ல என்பது இப்போது வெளிப்படையாகின்றது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தாலும் நிதி உதவிகள் விரைவாகக் கிடைக்கப்போவதில்லை என்பதும் தெளிவு.

கொழும்புக்கு வந்துள்ள பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிகாரிகள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்கனவே ஒரு சுற்றுப் பேச்சு நடத்தியுள்ளனர். ஆனால் அதில் அதிகளவு முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதிகாரிகள் மட்டத்திலான இந்தப் பேச்சுக்கள் இந்த மாத இறுதிக்குள் முடிவடையும் என்று இலங்கை முன்னர் எதிர்பார்த்திருந்தது. ஆனால் அது சாதகமான முறையில் முடிவடையுமா என்பது இப்போது கேள்விக்குறியாகி இருக்கிறது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் அடுத்த புதன் கிழமை மீண்டும் ஒரு தடவை அரச தலைவர் பேச்சு நடத்தவுள்ளார். இரு தரப்பினருக்கும் இடையிலான முதற்கட்ட சந்திப்பின் பின்னர் ஜப்பான் தூதுவரை உடனடியாகவே சந்தித்த அரச தலைவர் இலங்கையின் கடன்வழங்குநர்கள் மாநாட்டைக் கூட்டி கடன்மறு சீரமைப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக ஜப்பான் நாட்டைத் தலைமை தாங்குமாறு கேட்டுள்ளார்.

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் தெளிவான முடிவில்லாமல் பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கு உதவிகளை வழங்க அவசரப்படாது என்பதையே இது காட்டுகின்றது. நாணய நிதியத்தின் அதிகாரிகள் இதற்கு முன்னர் இந்த விடயத்தைப் பல தடவைகள் தெரிவித்துமிருக்கின்றனர். நாணய நிதியம் மட்டுமன்றி உலக வங்கியும் இதே நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருக்கின்றது. எனவே கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை இறுதி செய்யாமல் பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவி உடனடியாகக் கிடைக்கப்போவதில்லை.

இலங்கையின் படுகடன் 29 பில்லியன் டொலரை அது மீளச் செலுத்துவதற்கான வழிவகைகள் இலகுபடுத்தப்பட்டு மறுசீரமைக்கப்படவேண்டும். நாடு தப்போது எதிர்நோக்கியுள்ள சிக்கலில் இந்த கடனில் ஒரு சிறு பகுதியாவது விலக்களிக்கப்படவேண்டும். மிகுதியைச் செலுத்துவதற்கு இலகு தவணை முறைகள், வட்டி வீதக் குறைப்புகள், திருப்பிச் செலுத்தும் காலப்பகுதி நீடிப்பு என்று பலவும் சாதகமாக அமையும் பட்சத்திலேயே இலங்கையால் நெருக்கடியிலிருந்து மீளமுடியும்.

கடன்வழங்குநர்களில் முதன்மை நாடாக இருக்கும் சீனா கடன்மறுசீரமைப்புத் திட்டத்திற்கு ஒத்துழைப்பதிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது. சீனாவின் ஒத்துழைப்பு எப்படியானதாக இருக்கப்போகிறது என்பதைப் பொறுத்தே நாணய நிதியத்தின் உதவியும் தங்கியுள்ளது. நாணய நிதியத்தின் முடிவுகளைப் பொறுத்தே மற்றைய நாடுகளின் உதவிகளும் அமையும்.

ரணில் விக்கிரமசிங்க இதனை எப்படி வெற்றிகரமாகக் கையாளப் போகிறார் என்பதைப் பொறுத்தே இலங்கையர்களின் எதிர்காலம் அமையும்.

தூரநோக்கற்ற ஆட்சிகள் மூலம் நாட்டைக் கடன் குழிக்குள்ளும் மக்களின் எதிர்காலத்தை பாதாளத்திற்கும் தள்ளிவிட்டுள்ள அரசியல்வாதிகள் இப்போது அதிலிருந்து மீளும் வழிவகை தெரியாது நிற்கிறார்கள். இந்தப் பிரச்சினை இப்போதைக்கு முடிவுக்கு வரப்போவதில்லை. அதுவரை மக்களின் நிலைதான் பரிதாபம்.



## அரச தலைவர் மாளிகையில் படம் எடுத்துக்கொண்ட பொலிஸாரும் மாட்டினர்

போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட அரச தலைவர் மாளிகையினுள் சென்று அரச தலைவரின் இருக்கையில் அமர்ந்து ஒளிப்படம் எடுத்துக்கொண்ட காவல்துறையினர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான விசாரணைகள் நடந்து வருகின்றன என்று கொழும்பு கோட்டை நீதிவானிடம் காவல்துறையினர் தெரிவித்தனர். அரச தலைவரின் இருக்கையில் அமர்ந்து படம் எடுத்துக்கொண்ட காவல்துறையினர் தொடர்பாகவும் அரச தலைவரின் இல்லத்தின் பல்வேறு பகுதிகளிலும் படங்களை எடுத்துக்கொண்ட காவல்துறையினர் தொடர்பாகவும் இந்த விசாரணைகள் நடந்து வருகின்றன என்று கொழும்பு மத்தி குற்றவியல் திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அரச தலைவர் மாளிகைக்குள் இருக்கையில் இருந்தும் வேறு இடங்களில் இருந்தும் படங்களை எடுத்துக் கொண்டவர்கள் மீது காவல்துறையினர் வழக்குத் தாக்கல் செய்து வருகின்றனர். அத்தகையவரர்களைத் தேடிக் கண்டுபிடித்து அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்று நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இருப்பினும் மக்களைப் போன்றே இவ்வாறு படம் எடுத்துக்கொண்ட காவல்துறையினர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சட்டவாதி மைத்திரி குணரட்ன நீதிமன்றில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே காவல்துறையினர் அது தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுவதாகக் கூறியுள்ளனர்.

### தமிழ் இன...

என்ற வகையில் முதன் முறையாக மாநாடு நடத்தி பட்டயம் ஒன்றையும் வெளியிட இருக்கிறோம் - என்றார் அனந்தி சசிதரன்.

ஐப்பசி மாதம் 12ஆம் நாள் மாலை 2 மணிக்கு ஜெனீவாவில் உள்ள முருகதாசன் திடலில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வும் அதே தினத்தில் தொடங்கவுள்ள நிலையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு இணங்கிக்கொண்ட விடயங்களை அது இது வரையில் செயற்படுத்தாத நிலையில் கொழும்புக்கும் பேரவைக்கும் அழுத்தத்தைக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையில் நடந்த இன அழிப்புக்கு நீதி கேட்கும் பட்டயம் வெளியிடப்படும் என்று அனந்தி சசிதரன் கூறியிருக்கிறார். இந்த மாநாட்டில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவனும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

### டீசல்...

காத்திருந்தனர்.

டீசல் கப்பலுக்கான பணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை முதல் கப்பலில் இருந்து எரிபொருள் இறங்கத் தொடங்கியிருப்பதால் நிலமை வழமைக்குத் திரும்பும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

## கடன்...

அது தொடர்பான பேச்சுக்களையும் நடத்தி வருகின்றது. ஆனால், இலங்கையின் கடன் வழங்குனர்கள் கடன் மீளச் செலுத்துகைத் திட்டத்தை மறுசீரமைப்பதிலேயே தமது கடன் வழங்கும் முடிவுகள் தங்கியுள்ளது என்று நாணய நிதியம் கூறுகின்றது.
கடந்த திங்களன்று கொழும்பு வந்த நாணய நிதிய உயர் அதிகாரிகள் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அன்று மாலையே அரச தலைவர் ஜப்பானியத் தூதுவருடனும் ஒரு சந்திப்பை நடத்தினார். இதில் அவசரமாக கடன் வழங்குநர்களுடன் ஜப்பானின் ஏற்பாட்டில் பேச்சு நடத்துவது என்று திட்டமிடப்பட்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தனது தகவல் மூலங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருக்கின்றது.
ஆனால் இந்தக் கூட்டத்தில் சீனா கலந்துகொள்ளச் சம்மதித்தா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. சீனா தான் இலங்கையின் முதன்மைக் கடன் வழங்குநரான நாடு. 2020 இறுதிவரை 6.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் அதற்குத் திருப்பிச் செலுத்தப்படவேண்டியிருந்தது. ஜப்பான் இரண்டாவது பெரிய கடன்வழங்குநர் நாடு. அதற்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் திருப்பிச் செலுத்தப்படவேண்டியுள்ளது.
நிக்கி ஏசியா என்கிற டோக்கியோவைத் தளமாகக் கொண்டியங்கும் இணைய ஊடகம் ஒன்றுக்கு கடந்த வியாழக் கிழமை கருத்துத் தெரிவித்த அரச தலைவர், சீனாவின் அணுகுமுறையில் பெரும் மாற்றத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார். அது இலகுவான விடயமல்ல என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.
இலங்கைக்கு அவசரமாக இருந்தபோதும் கடன் வழங்குநர்களின் கூட்டம் நடத்தப்படுவதற்கு ஆகக் குறைந்தது அடுத்தமாதமாவது ஆகும் என்று சில தகவல் மூலங்கள் தெரிவிக்கின்றன. வேறு சில தகவல் மூலங்களோ அதற்கு சில மாதங்களாவது ஆகும் என்று கூறுகின்றன.
கடன் மறுசீரமைப்பு முடிவடையாமல் எந்த விடயமும் முன்னகராது என்று அந்த மூலங்கள் திடமாக நம்புகின்றன என்றும் ரொய்ட்டர்ஸ் செய்தி கூறுகின்றது.

---

## சிறையிலிருந்தது...

என்று அவர் தெரிவித்தார்.
நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தின் கீழ் நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டார் ரஞ்சன் ராமநாயக்க. நடிகரும் பிரபல அரசியல்வாதியுமான அவர் விடுவிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. தவிர பல பொது அமைப்புக்களும் அவரது விடுதலையை வலியுறுத்தி வந்தன.
இந்த நிலையில் வெள்ளிக்கிழமை அவரது விடுதலைக்கான உத்தரவில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டார். அதற்கு முன்னதாக தனக்குப் பொது மன்னிப்பு வழங்கும்படி அரச தலைவருக்கு ரஞ்சன் கோரிக்கை வைத்திருந்தார். ஒன்றரை வருடச் சிறை வாசத்தின் பின்னர் அவர் இப்போது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.
வெள்ளிக்கிழமை மாலை அவரை வரவேற்பதற்கு வெலிக்கடைச் சிறைக்கு முன்பாக பெரும் எண்ணிக்கையானவர்கள் திரண்டிருந்தனர். எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் அவரை வரவேற்க நேரில் வருகை தந்திருந்தார். சிறைக் கதவுகளைத் தாண்டி ரஞ்சன் வெளியே வந்தபோது கூடியிருந்தவர்கள் "ரஞ்சா! ரஞ்சா!" என்று அவரது செல்லப் பெயரைக் கூவி ஆர்ப்பரித்தனர்.
ரஞ்சனின் நெருங்கிய சகாவாகவும் அவரது விடுதலைக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வந்தவருமான அமைச்சர் மனுஷ நாணயக்கார உடனடியாகவே ரஞ்சனுக்கு ஒரு வேலையும் வழங்கியுள்ளார். உலக நாடுகளில் பரவியுள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான சிறப்புத் தூதுவராக அவரை நியமித்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். அதனை அவர் ஏற்றுக்கொண்டார் என்றும் தெரிவித்திருக்கிறார்.
ரஞ்சனும் மனுஷவும் ஐக்கிய மக்கள் சக்தியின் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியிருந்தனர். இருப்பினும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு மூன்று மாதங்கள் செல்லாத காரணத்தால் ரஞ்சன் நாடாளுமன்றப் பதவியை இழந்தார். மனுஷவோ ரணில் தலைமை அமைச்சரானதும் அவரது அமைச்சரவையில் போய்ச் சேர்ந்து கொண்டார்.
இவர்கள் இருவருக்கும் இடையிலான நட்பின் காரணமாக ரஞ்சன் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சென்று விடக்கூடும் என்கிற நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் வெற்றிடம் ஏற்படும்போது ரஞ்சனையே அந்தப் பதவிக்கு நியமிக்க இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்திருக்கிறார். இதன் மூலம் ரஞ்சன் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சரிந்து விடாமல் காய்களை நகர்த்துகிறார்.
ஆனால், தான் இப்போதைக்கு எந்தக் கட்சியிலும் இணைந்து தீவிர அரசியலில் ஈடுபடப்போவதில்லை என்றும் எனினும் தனது கடைசிக் காலத்திற்குள் அரசியலுக்குத் திரும்பி வருவேன் என்றும் சிறைவாசலில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார் ரஞ்சன்.

---

## அனைத்துக்...

அனைத்துக் கட்சியினரையும் அமைச்சரவைக்குள் உள்வாங்கி புதிய ஆட்சியை அமைப்பதில் ரணில் அக்கறை காட்டினாலும் அதற்கு சாதகமான சமிக்ஞையை எதிர்க் கட்சிகள் காட்டவில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ரணிலின் ஆட்சிக்குத் தேவையான ஆதரவை நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்குவது குறித்துத் தாம் உறுதியாகப் பரிசீலிப்பார்கள் என்பதற்கு மேல் எந்த உத்தரவாதத்தையும் தருவதற்கு எதிர்க் கட்சிகள் மறுத்துவிட்டன.
இந்த நிலையில் மீண்டும் பொது ஜன பெரமுனவின் ஆட்சியே ரணில் தலைமையில் அமைவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# சிறையில் அடைத்துக் கஞ்சி தந்தார்கள்

**கமலநாதன்**

பி.எம்.நந்தன சமன்சிறி 1985இல் இலங்கைக் காவல்துறையில் சேர்ந்தார். அக்கிரம்தொட என்ற படை முகாமில் பயிற்சி பெற்றார். 1990இல் மாங்குளம் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது புலிகளால் கைது செய்யப்பட்டார். 5 வருடங்கள் வரை புலிகளின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தனது சிறை வாழ்க்கை பற்றிய பல்வேறு அனுபவங்களை வெனச யூ ரியூப் தளத்தில் கீழ்வருமாறு பதிவு செய்துள்ளார். அவரது கருத்துக்கள் சென்ற வார செம்மண் இதழிலும் வந்திருந்தது. அதன் தொடர்ச்சி இந்த வாரம் வெளியாகிறது.

புலிகளின் சிறையில் தினமும் காலையில் பிளாஸ்ரிக் வாளி ஒன்றுக்குள் உப்புக் கஞ்சி மட்டும் தருவார்கள். அவர்கள் தரும் பிளாஸ்ரிக் கப் ஒன்றுக்குள் ஊற்றி அதைக் குடிக்கவேண்டும். பகலில் சோறு, பருப்பு, எல்லாம் சேர்த்துக் குழைத்த சோற்றை வாளியில் போட்டுத் தருவார்கள். லஞ்சீற்றில் போட்டுக் கையில் ஏந்திச் சாப்பிட்டோம். இரவு தேசை அல்லது இட்லி தருவார்கள். 20-25 நாள்களுக்கு ஒரு தடவை குளிக்க விடுவார்கள்.

**அங்கிருந்த இரண்டு அறைகளில் எங்களைப் பிரித்து அடைத்தார்கள். அந்தச் சிறை வீட்டில் இருந்த தண்ணீர் உப்பாக இருந்தது.**

**சாவகச்சேரிச் சிறை வீடு**

ஒரு நாள் மாலை 5 மணியிருக்கும் எங்கள் 44 பேரையும் மூடிய லொறி ஒன்றுக்குள் ஏற்றி அடைத்தார்கள். மறுநாள் காலை 4 மணியளவில் வெற்றிலைக்கேணிப் பகுதியில் வைத்துப் புலிகளால் கட்டப்பட்ட படகுப் பாதை ஒன்றின் மீது லொறியுடன் ஏற்றினார்கள். அந்தப் படகுப் பாதை செல்லும்போது அலைகளில் ஆடி லொறியுடன் கவிழப் பார்த்தது. பின்னர் வேறு படகுகளில் இருந்து கயிறு போட்டு இழுத்து நிமித்தினார்கள். அந்தப் பாதை படையினருக்குத் தெரியாமல் குடாநாட்டுக்குச் செல்லும் இரகசியப் பாதை. இந்தப் பயணத்தின் முடிவில் சாவகச்சேரிக்குக் கொண்டு



போய்ச் சேர்த்தார்கள்.

சிறைக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்த வீடு ஒன்றில் இறக்கினார்கள். அங்கிருந்த இரண்டு அறைகளில் எங்களைப் பிரித்து அடைத்தார்கள். அந்தச் சிறை வீட்டில் இருந்த தண்ணீர் உப்பாக இருந்தது. அதைக் குடிக்க முடியாது. போர் வானூர்திகள் அந்தப் பகுதிக்கு வரும்போது புலிகள் வேண்டுமென்றே அதைக் குறி வைத்துச் சுடுவவார்கள். ஒரு நாள் அவ்வாறு சுட்ட போது புலிகளின் முகாம் என்று நினைத்துப் படைத் தரப்பின் சியா மாசெட்டி வானூர்தியிலிருந்து 11 குண்டுகள் வீசப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 50 கிலோ பாரமானவை. அதில் ஒரு குண்டு நாங்கள் அடைக்கப் பட்டிருந்த இடத்திலிருந்து 20 மீற்றருக்கு முன்னால் விழுந்தது. அது வெடிக்கவில்லை. நாம் அடைக்கப் பட்டிருந்த இரண்டு அறைகளையும் தவிர அந்த வீடு முழுதும் குண்டு வீச்சில் அழிந்தது.



**கைக்குண்டு வீச முயன்றார்கள்**

வானூர்திக் குண்டுவீச்சில் சாகவில்லை என்றதும் அங்கிருந்த போராளி ஒருவர் நீங்கள் இன்னும் சாகவில்லையா? இப்ப கிரேனேற் அடிக்கிறன் என்று கூறிக் கொண்டு ஓடிப்போனார். அப்போது வானூர்திக் குண்டு ஒன்று விழுந்தது. நாங்கள் பார்த்திருக்கவே அவர் உடல் சிதறிப்போய் இறந்தார். இந்தத் தாக்குதலைப் பயன் படுத்தி அன்றிரவு எங்களுடன் அடைக்கப்பட்டிருந்த தர்மசிறி என்ற காவல் அதிகாரி தப்பி ஓடிவிட்டார். பின்னர் அவரது கைகளை முறித்துவிட்டு அங்கு கொண்டு வந்தார்கள்.

இரவு நேரம் தனது காலில் கட்டப்பட்ட இரும்புச் சங்கிலியை இழுத்தபடி 4 கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்த வீடு ஒன்றுக்குள் போய் அவர் புகுந்தபோது அந்த வீட்டார் அவரைப் பித்துப் புலிகளிடம் கொடுத்தனர் என்று பின்னர் அறிந்தேன். எங்களில் 6 பேர் நோய் காரணமாக அதற்கான மருத்துவ வசதி வழங்கப்படாமல் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் இறந்தார்கள்.

**அச்சுவேலி அகிலா முகாம்**

பின்னர் எங்களை அச்சுவேலியில் தென்னந்தோட்டம் ஒன்றுக்குள் இருந்த அகிலா என்கிற புலிகளின் முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். இருவருக்கு ஓர் அறை என அடைத்தார்கள். இரவில் நித்திரை கொள்ளாதபடி எமக்குத் தண்ணீர் ஊற்றுவார்கள். எங்காவது படையினர் தாக்குதல் நடத்தினால் பச்சைப் பனை மட்டையால் எங்களுக்குத் தாறுமாறாக அடிப்பார்கள்.


**குருநகர் ஞானம் மாஸ்ரரின் வீடு**

பின்னர் குருநகர் ஞானம் மாஸ்ரர் வீட்டில் சிறை வைக்கப்பட்டோம். புலிகள் எங்களைப் பிடித்து 4 வருடங்கள் முடிந்திருந்தன. அப்போது கடும் போர் நடந்தது. வானூர்திக் குண்டுவீச்சு, செல் வீச்சு என முழு நாளும் சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். 1992இல் ஆனையிறவுப் பகுதியைப் புலிகள் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். ஜெனரல் கொப்பே கடுவ குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இனியும் அங்கிருந்து பயனில்லை என்று முடிவெடுத்தோம். கதவில் பலமாக அடித்து எங்களை விடுவியுங்கள் அல்லது கொன்று விடுங்கள் என்று கத்தினோம். எங்கள் எல்லோரையும் வெளியே எடுத்து நிலத்தில் படுக்க வைத்துக் கடுமையாகத் தாக்கினார்கள். 2 பேருக்குக் கால் நடக்கமுடியாதபடி அடித்து உடைத்தார்கள்.

ஓரிரு நாள்களின் பின்னர் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வந்து எங்களைப் பார்த்தர்கள். அப்போது நாங்கள் பிடிபட்டு 4 வருடங்களும் 3 நாட்களும் கடந்திருந்தன.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் எங்களைக் காட்டுவதற்கு முன் காலில் ஒட்டியிருந்த இரும்பு விலங்குகளை வெட்டினார்கள். பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அங்கிருந்து சென்றதும் மீண்டும் விலங்குகளைப் பூட்டினார்கள். கால் முறிக்கப்பட்டவர்களைக் காட்டி இவர்கள் ஏன் நடக்க முடியாத நிலையிலுள்ளனர் என்று செஞ்சிலுவைச் சங்கத்தினர் கேட்டபோது ஓட முயற்சித்ததால் அடித்தோம் என்று எமக்குப் பொறுப்பாக இருந்த புலி உறுப்பினர் மிகச் சாதாரணமாகப் பதிலளித்தார்.

1995இல் அரச தலைவர் சந்திரிகா போர் நிறுத்தம் செய்தபோது நாங்கள் உணவு தவிர்ப்புப் போராட்டம் செய்தோம். உணவுண்ணும்படி வற்புறுத்தினார்கள். தண்ணீர் குடிப்பதையும் தவிர்த்தோம். பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வந்து தண்ணீர் குடிக்குமாறு கூறினார்கள். அப்போது நாம் 18 பேர் வரையில் இருந்தோம். கடைசியில் ஒருவாறு புலிகள் எம்மை விடுவிக்கச் சம்மதம் தெரிவித்தார்கள். எம்மைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் பொறுப்பெடுத்துக் காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து இரத்மலானை வானூர்தி நிலையத்துக்கு அனுப்பினார்கள். அதன் பின்னர் ஒரு மாதம் வரை படை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு சென்றோம்.




நியூட்டன்

# ஆட்சிக்குச் சார்பான அழுத்தக் குழுக்கள்

ராஜபக்ச குடும்பத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், அவர்கள் யாரும் அரசியலில் இருக்கக் கூடாது என்று பலரும் போராட்டத்தில் இறங்கியதால் மகிந்த குடும்பம் ஓரம் கட்டப்பட்டதே தவிர, போராட்டக்காரர்கள் நினைத்த 'சிஸ்ரம் சேஞ்ஜ்' என்கிற முறைமை மாற்றம் நடக்கவில்லை. அதற்காக மேலும் ஒரு போராட்டம் தலைதூக்காமலிருக்கவும் இந்த அரசே பதவியில் நீடிக்க வேண்டும் என்பதற்காகவும் அரசுக்குச் சார்பான பல அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரப் பிரச்சினையைக் கையாள்வது, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைக் காப்பது, மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவது, பன்னாட்டு நாணய நிதியத்தின் கோரிக்கைகளைச் சாதகமாக்குவது எனப் பல விடயங்களைக் கருத்தில் கொண்டு இந்த அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**நாடாளுமன்றத்தைக் கலைக்க விரும்பாதோர்**

நாடாளுமன்றத்தைக் கலைக்காதிருக்கவேண்டும் என்பதற்காவே சர்வ கட்சி அரசு என்ற கருத்தை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கி முன்வைத்தார். 2024 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தைக் கலைக்காதிருந்தால் மாத்திரமே தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும். இனி நடக்கவிருக்கும் தேர்தல்களில் தாம் தோற்கடிக்கப்படுவோம் என்பதை நன்கு உணர்ந்துகொண்ட தற்போதுள்ள உறுப்பினர்களுக்கும் பதவிக்கு வந்த அரச தலைவருக்கும் இடையே நாடாளுமன்றைக் கலைத்துவிடக்கூடாது என்ற பொது ஏற்பாடு ஒன்று நிலவுவது போன்றே தெரிகிறது.

இந்தச் சூழலை மேலும் வலுப்படுத்துவதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வரியற்ற 2ஆவது வாகன இறக்குமதிக் கொள்வனவுக்கான அனுமதிகளை (ஏற்கனவே 1 வழங்கப்பட்டுவிட்டது) வழங்குவதாக ரணில் அறிவித்திருக்கிறார். இவ்வாறான சலுகைகள் வழங்கப்படும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ரணிலை உறுப்பினர்கள் வாக்களித்து அரச தலைவராக்கியுள்ளனர். அவசரகாலச் சட்டம் தேவையற்றது என்று கூறியவர்கள் அதன் பின்னர் அவசரகாலச் சட்டம் தேவையானது என்று 3இல் 2க்கு அதிகமானபெரும்பான்யினராகி ரணிலுக்குச் சார்பாக வாக்களித்ததன் பின்னணியிலும் இதுவே இருக்கிறது.

**போராட்டக்காரர்களும் அழுத்தக் குழுக்களும்**

ராஜபக்சாக்களுக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்த (குமார் குணரட்ணம் தலைமையிலான முன்னணிச் சோசலிசக் கட்சியினர் ஓரம் கட்டப்பட்டு ஜே.வி.பி. தற்போது அந்தப் போராட்டத்தைக் கையிலெடுத்தது போன்றதொரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. ஜே.வி.பியை விட்டு குமார் குணரட்ணம் ஒரு பிரிவினருடன் வெளியேறித் தனியாகச் செயற்பட்டபோது அது தமக்கு ஆபத்தானது என்பதை உணர்ந்த அனுர குமார அணியினர் மகிந்த ராஜபக்சவின் உதவியுடன் குமார் குணரட்ணத்தை சிறையில் அடைத்தார்கள்.

குமார்குணரட்ணம் சிறையிலிருந்து விடுதலையாகிய பின்னரே அரசுக்கு எதிரான போராட்டத்தை முழு மூச்சுடன் செயற்படுத்தி வெற்றி கண்டார். இது பெரும்பாலான சிங்கள மக்களுக்குத் தெரிந்த விடயம். போராட்டம் ஓய்வு நிலையை அடைந்து அதில் பங்கெடுத்த முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். அந்த ஊர்வலத்தின்போது கண்ணீர்ப் புகைக்குண்டு, நீர்த்தாரைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். போராட்டக்காரர்கள் மீது இப்படித்தான் அரசு தாக்குதல் செய்யும் என்ற நிலை இருந்தது. அதன் பின்னர் அநுரகுமார தலைமையில் கடந்த 20ஆம் திகதி மிகப் பெரிய ஊர்வலம் ஒன்று நடந்தது. அரசின் எந்தவித இடையூறும் இன்றி

08

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவுபடுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல் வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச்சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இவ்வாரச் சொல்

## "எப்பன்"

யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் அவ்வப்போது பாவிக்கப்படும் சொல் எப்பன். இது பெயர்ச்சொல்லாகவே பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது. எப்பன் என்றால் கொஞ்சம், மிகச் சிறிய அளவு, ஆகக் குறைவானது என்று அர்த்தப்படுவதாக இருக்கிறது. பொருள்களையும் காலத்தையும் சிறிய அளவில் - அளவீட்டு ரீதியில் சுட்டுவதற்கு இந்த எப்பன் என்கிற சொல் பயன்படுத்தப்படுகிறது.

'எப்பன் சீனி தா', 'எப்பன் கோப்பித்தூள் தா' என்பதன் அர்த்தம் ஒரு தேநீர் தயாரிப்பதற்குத் தேவையான அளவில் அவற்றைத் தருமாறு கேட்பதாகும். 'எப்பன் நேரம் இருந்துகொள் வந்துவிடுவான்" என்பதன் அர்த்தம், மிக அண்மையில் இருக்கின்ற ஒருவர் உடனே வந்துவிடுவார் என்பதாகும்.

"எப்பன் பொறுத்திருந்தால் அந்த விபத்திலிருந்து தப்பியிருக்கலாம்" என்பதில் வரும் எப்பன், சிறிய காலப்பகுதியைக் குறிக்கிறது. "எப்பன் பொறுத்தால் சாப்பிட்டிட்டே வெளிக்கிடலாம்" அதாவது சமைத்து முடிந்து அடுப்பிலிருந்து அவற்றை இறக்கும் நேரம் வந்து விட்டது கொஞ்சம் பொறு என்ற அர்த்தத்தில் இங்கு எப்பன் பாவிக்கப்படுகிறது.

"அங்கு ஆக்கள் வரயில்லைப்போல எப்பனுக்குப் பொறுத்துப்போவம்" என்பதில் மிகச் சிறிய காலவெளியை வரையறை செய்கிறது. இவ்வாறாக எப்பன் என்பது மிகச்சிறிய காலவெளியையும், குறைந்தளவு பொருள்களையும் சுட்டி நிற்கிறது.

அது நடந்து முடிந்தது. இதிலிருந்தே ஆட்சியாளர்கள் யாரைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்கள் என்பது வெளிப்படுகின்றது.

போராட்டம் செய்பவர்களை அடக்குமுறைகளால் முடக்கக் கூடாது என்று மனித உரிமை அமைப்புகள் கோரி வரும் நிலையில் நாம் அப்படிச் செய்வதில்லை என்பதை அரசு நிரூபிப்பதற்கு ஜே.வி. பியின் இந்தப் போராட்டம் உதவியது. இது விடயத்தில் ஜே.வி.பி. அரசுக்குச் சார்பான ஓர் அழுத்தக் குழுவாகச் செயற்பட்டிருக்கிறது.

டலஸ் - ஜீ.எல்.பீரிஸ் அணியினரும் ஒரு புது அணியாகச் செயற்பட்டாலும் அரசுக்குச் சார்பான ஓர் அழுத்தக் குழுவாகவே செயற்படுகின்றனர். அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கமாட்டோம். அல்லது அரசின் குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்போம் என்று இவர்கள் கூறுவது இந்த அடிப்படையிலேயே.

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உரிமை சார்ந்த விடயங்களுக்கு அப்பால் நாடாளுமன்றம் கலைக்கப்படாதிருப்பதிலும் அது கலைக் கப்படுவதற்கு முன்னர் வாகன அனுமதியை பெற்றுக் கொள்வதிலும் குறியாக இருப்பது தெரிகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகத் தமிழ் மக்களிடம் கையெழுத்து வேட்டையை மீண்டும் தொடங்க இருக்கிறோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் கூறி வருகிறார். அவரால் ஏற்கனவே இவ்வாறு கையெழுத்துகள் பல பெறப்பட்டிருந்தன. அரச தலைவர் ரணிலைப் பொறுத்த வரை புதிய அழுத்தக் குழுக்கள் தமக்கு விருப்பமான படி அரசியல் நடத்துவதற்காக அவற்றை நீளக் கயிற்றில் விடப்பட்டிருப்பது தெரிகிறது. இதன் அடிப்படையிலேயே புதிய அழுத்தக்குழுக்கள் களமிறங்கியுள்ளன.

2024வரை தற்போதுள்ள ஆட்சிக்கு முட்டுக்கொடுப்பதிலும் ரணிலிடமிருந்து உருவக் கூடிய வசதி வாய்ப்புகளை உருவி எடுப்பதிலுமே இந்த அழுத்தக்குழுக்கள் முழுமூச்சாக கவனம் செலுத்தும். மக்களுக்கான தீர்வைப் பெறுவதில் அல்ல.

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

30



## "பீர் குடித்தால் சிறுநீரகக் கல் அகலுமா?"

கிட்னி என்கிற சிறுநீர்ப் பையில் உருவாகின்ற சிறுநீரகக் கல்லால் அவஸ்தைப்படும் சகாவுக்கு "டேய் மச்சான் ஒரு ரின் பியர் வாங்கிக் குடிச்சுப்போட்டு முக்கி மூத்திரம் பேய்ஞ்சால் எல்லாம் சரியாகிடும்" என்று அறிவுரைகூறும் நண்பர்கள் பலரை நமது சமூகத்தில் கண்டிருக்கிறோம். நண்பர்கள் மாத்திரமன்றி உறவினர்கள், குடிப்பழக்கமுள்ள முதியவர்கள், குடிக்கு அடிமையாகியவர்கள் எனப் பலரும் இதை ஒரு தத்துவமாகவே பேசித் திரிவார்கள்.

சிறுநீர்ப் பை எனப்படுகின்ற மூத்திரப் பையில் உருவாகின்ற கற்களை அகற்றுவதற்கு பியரைப் பரிந்துரைக்கின்ற பலரை நமது சமூகத்தில் காண முடியும். சிறுநீரகக் கற்களை அகற்றுவதற்கு பியர் எனப் படுகின்ற போதைப் பானம் உதவுமா? பீர் குடிப்பதால் சிறுநீரகக் கற்கள் அகலுமா? சிறுநீரகக் கற்களைச் சிறுநீர்ப் பையிலிருந்து அகற்றுவதற்குப் பீர் ஏற்றதுதானா? என்றெல்லாம் தேடிப்பார்த்தால் உங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும்.

பின்னர் என் அப்படிச் சொல்கிறார்கள்...? அப்படிச் சொல்லும் வழக்கம் எவ்வாறு ஏற்பட்டது...?

சிறுநீர்ப் பையில் உருவாகின்ற கற்களை அகற்றுவதற்கும், சிறுநீர்ப் பை, சிறுநீர் வாசலில் ஏற்படுகின்ற கிருமித் தொற்றுகளை அகற்றுவதற்கும் நீர் அருந்துவது முக்கியமானது. மருத்துவர்களும் நீராகாரத்தையே முதற் கட்டமாகப் பரிந்துரைப்பார்கள். சாதாரண காலங்களில் அன்றாடம் 2 தொடக்கம் இரண்டரை லீற்றர் வரையிலான சிறுநீர் வெளியேற்றம் ஏற்படும் அளவுக்கு நீரை உள்ளெடுப்பது அவசியம். இதுவே கிருமித் தொற்று அல்லது சிறுநீரகக் கல் ஏற்படுமிடத்து 200 மில்லி லீற்றர் நீராகாரத்தை ஒரு மணிநேரத்துக்கு ஒரு தடவை உள்ளெடுக்க வேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

அந்த வகையில் பியரும் ஒரு நீராகாரமாக இருப்பதால் குடி விரும்பிகள் தங்கள் வசதிக்ககு பியரை சிறுநீரகக் கல் அகற்றியாக வடிவமைத்துக்கொண்டார்கள். மற்றும்படி அதற்குச் சிறுநீரகக் கற்களை அகற்றும் எவ்வித திறனும் இல்லை. அது ஒரு நீராகாரம் என்பதைத் தவிர சிறுநீரகக் கற்களை அகற்றுவதற்கு அதனால் துளியும் முடியாது.

தூய நீரை உள்ளெடுப்பதில் பின்னடிக்கின்றவர்களும் போதையை விரும்புபவர்களுமாக இணைந்து பியர் குடித்தால் சிறுநீரகக் கல் அகலும் என்ற பொய்யான கருத்தைத் தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பரப்பித் தமது ஆசையை நிவர்த்தி செய்கின்றனர். பியரால் வேறு ஏதாவது பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டே தவிர சிறுநீரகக் கல் அகலாது. பியர் குடித்தால் சிறுநீரகக் கற்கள் அகலும் என்று சொல்வதற்குக் காரணம் பியர் பிரியர்கள் பியர் குடிப்பதற்காகத் தமக்குள்ளும் தம்மைச் சார்ந்தவர்கள் மத்தியிலும் ஏற்படுத்திக்கொள்ளும் சாட்டுப்போக்கே தவிர வேறில்லை.

# பொருளாதார இடரை எதிர்கொள்ளும் சமூக அணுகுதல்

**மருத்துவர் சி.யமுனாநந்தா**

தற்போதைய பொருளாதார நெருக்கடி மக்களில் பெருமளவானோரைப் பாதித்துள்ளது. இந்தப் பாதிப்பு நிலையில் அதிமுக்கியமானவைகளாக மக்களின் பசியினைக் குறைத்தல், பட்டினியினைக் குறைத்தல், போசாக்கின்மையினைக் குறைத்தல் ஆகிய செயற்பாடுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவது அசியப்படுகின்றது.

நாட்டில் அத்தியவசியமான பொருட்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. உணவின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது. போதிய உணவின்மையால் சிறுவர்கள், குழந்தைகள், கர்ப்பவதித் தாய்மார்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சிறுவர்களில் 20 சதவீதத்தினருக்கு மேல் போசாக்கின்மைக்கு உள்ளாகி உள்ளனர். பல குடும்பங்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதை அடிமட்ட மனிதக் குழுமங்களுக்குள் அதிகம் உணரமுடிகிறது. 1940களில் வங்காளத்தில் ஏற்பட்டது போன்றதொரு நிலையே தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு, மருந்துப் பற்றாக்குறை என்பன தாழ்ந்த வருமானம் உள்ளவர்களை அதிகம் பாதிக்கின்றன. வசதி உடையவர்கள் உணவை என்ன விலை கொடுத்தும் பெற்றுக்

**போதிய உணவின்மையால் சிறுவர்கள், குழந்தைகள், கர்ப்பவதித் தாய்மார்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சிறுவர்களில் 20 சதவீதத்தினருக்கு மேல் போசாக்கின்மைக்கு உள்ளாகி உள்ளனர்.**



கொள்ளத் தயாராக உள்ளனர். மேலும் வசதிபடைத்த வர்களின் ஆடம்பரச் செலவீனங்கள் சமூக வறுமையை மூடி மறைக்கின்றன. வீட்டுக்குத் தேவையான பொருட் களைக் கொள்வனவு செய்தல் பொதுவாகக் குறைந்துள்ளது. பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதும் குறைந்து செல்கிறது. எரிபொருளைப்போலவே கிடைக்கும் உணவு, மருந்துப் பொருட்களைச் சமமாகப் பங்கிடும் முறைமைகள் உருவாக் கப்படவேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மனிதாபிமான நெருக்கடி



# திரைப்படம்!

**தாமினி**

திரைப்படம் என்பது வித்யாசம் காட்டுவது. பிரம்மாண்டமான உலகம் கலையையும், வியாபாரத்தை யும் கலவையாக்குகிறது. நல்ல திரைப் படம் வியாபாரம், கலைக்கு இடை யிலான பிரிவை ஒன்றிணைக்கிறது.

**திரைப்படம் என்ன செய்கிறது?**

நவீன உலகில் மிகப்பெரிய கவர்ச் சியான அம்சமானதால், திரைப்படம் எல்லாவற்றுடனும் தொடர்பு கொண் டுள்ளது. வேறுபாடுகளைக் கொண்டி ருந்தாலும் அடிப்படையில் இறந்த, நிகழ், எதிர்காலங்களில் காலத்தை புரிந்து கொள்ளச் செய்கிறது. உலகம் முழுவதும் எப்போதுமிருக்கும் வித்யா சங்களைப் பற்றியது திரைப்படம். வாழ் க்கையின் பிரகாசங்களை இணைக் கும் பார்வையாகிறது. பண்பாடு, நாடு கள், மக்களை இணைக்கும் முதல் தர வழியாகும் திரைப்படம்.

**திரைப்பட விழாக்கள்**

உலகம் முழுவதிலிருந்தும் வரும் திரைப்படங்களைக் காணவும் அடை யாளம் காணவும் திரைப்பட விழாக்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. எவ்வ கைப் பிரச்சினைகள் முக்கியமானவை என்பதை ஒருவர் அறிந்து கொள்ள லாம். அரசியலை விடவும் முக்யத்து வம் வாய்ந்த பிரச்னைகளை இணைத் தும் ஒருங்கிணைத்தும் முடிவாகிறது.

நல்ல திரைப்படங்களை அடை யாளம் காண தொழில்தனம், ஒரு நல்ல ஸ்கிரிப்டை முழுமையாக்குவது, நல்ல நடிகர்கள், நல்ல இயக்கம் என் பது குறித்து தனிப்பட்ட முறையில் பார்க்கிறேன். நல்ல தொழில் நுட்பத் திற்காக உறுதுணை புரிகிறது. எனவே திரைப்படங்கைளைப் பார்க்கிறபோது திறமையின் பொலிவை நான் பார்க் கிறேன். யதார்த்தமான கதாபாத்திரங் கள் யதார்த்தமான பிரச்னைகளுடன்



தற்போதைய கால சூழலை பிரதிபலிக் கும் உண்மையானப் படங்களை நான் விரும்புகிறேன்.


**ரஷ்யன் திரைப்படம், ஹாலிவுட் மற்றும் பாலிவுட் :**

ரஷ்யத் திரைப்பட உலகில் யுஎஸ் எஸ்ஆர் க்கு முந்தின நிலை என்பது புதிய முன்னேற்றங்களுக்கான ஆச்சர் யமானவை, ஆனால் அது தேவையான முறையல்ல, எப்போதும் இருந்து வரும் நல்ல திரைப்படங்கள் முக்கியப் பிரச்னைகளை ஆழமாக விவாதிக்கி றது.

நிலையினை ஏற்படுத்தலாம். இச் சந்தர்ப்பத்தில் சமூக முன்னோடித் திட்டங்களை நெறிப்படுத் துவது அத்தியவசியமா கின்றது. இவை 'பசியினைப் போக்கல்', 'பட்டினியினை அகற்றல்', 'வேலை வாய்ப்பினை வழங்கல்' ஆகிய இலக்குகளை அடைபவையாக அமைதல்வேண்டும். தற்போதைய சூழலில் காணப்படும் சமூக அமைதியின்மை நிலையை பாதக சூழ்நிலைக்கு இட்டுச் செல்லக்கூடாது. அரசியல் பிறழ்வுநிலை பன்னாட்டு உதவிகளைப் பெறுவதில் தடங்கல் களை ஏற்படுத்தும். இவை அனைத்தும் சமூகத்தில் வறுமையான மக்களை அதிகம் பாதிக்கும். மேலும் நாம் சமூகம் சார்ந்த கூட்டுறவு அமைப்புக்களை ஏற்படுத்தி அத்தியாவசிய பொருட் களை அனைவருக்கும் பெற்றுக் கொடுக்க வழி சமைத்தல் வேண்டும். உணவு உதவித் திட்டங் களை வறிய மக்களுக் கும் பெற்றுக் கொடுத் தல்வேண்டும். விவசாயி கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். கூட்டுப்பண் ணைகள் உருவாக்கப்படல் வேண்டும். எமது பிரதேசத்தில் சமூகப் பணியினை முன்னெடுப்பதற்கு மிகவும் உறுதுணையாக சமூக நிறுவனங்களும் கிராமியக் கட்டமைப்புக்களும் அமைகின்றன. இவற்றின் ஊடாக பொருளாதார மீட்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது நம் கடமையாகும்.

# உள்ளதை உள்ளபடியே கூறும் 'உள்ளம்'

வேதநாயகம் தபேந்திரன்




வாசிப்புப் பண்பாடு என்பது மிக நீண்ட காலமாக ஒரு வழிப்பட்ட பண்பாடாக இருந்தது. அதாவது வன்பிரதி வாசிப்புப் பண்பாடாகவே இருந்து வந்தது. கைகளால் தொட்டுணரப்படும் அச்சுத் தாள்களை வாசித்து வந்த ஒரு வழிமுறையாகவே இருந்தது.

இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் என்று சொல்லலாம், இந்த வாசிப்புப் பண்பாடு வன்பிரதி, மென்பிரதி என இருவகைப்பட்டதாக மாற்றம் பெற்றது. சமூகவலைத்தளங்களின் பேரெழுச்சி மென்பிரதிகள் ஊடான வாசிப்புப் பண்பாட்டையும் மின்னியல் புத்தகங்களையும் கலை இலக்கிய இதழ்களையும் பெருமளவில் உற்பத்தியாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் புறநகரான கொக்குவிலில் இயங்கும் வளர்மதி சனசமூக நிலையம் வன்பிரதிகளாக வெளியிட்ட உள்ளம் கலை இலக்கிய சமூக காலாண்டிதழின் அண்மைய மென்பிரதி இதழ்களை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உள்ளம் இதழ் அச்சுப் பிரதியாகவும் வெளிவந்துள்ளது.

தரமான எழுத்துக்களை எழுத்தாளர்களைத் தேடி எடுத்து இலக்கிய சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதன் வலியை களத்தில் நிற்பவர்கள் உணர முடியும்.

உள்ளம் சஞ்சிகையின் 2022 ஆம் ஆண்டின் ஏப்பிரல் - யூன் இதழ் 158 பக்கங்களில் வெளியாகி உள்ளது. அட்டைப் படத்தின் குறியீட்டு ஓவியம் பார்ப்பவர்களை, என்ன ஏது வென்று முடிவெடுக்கச் சில நிமிடங்களைச் செலவிட வைக்கிறது.

உள்ளத்தின் உள்ளடக்கம் வாசிப்பவர்களின் பலவித இரசனைகளுக்கும் தீனி போடக் கூடியதாக உள்ளது.முக்கியமாக ஆக்கங்களை எழுதியவர்களது சமகால வர்ணப் புகைப்படங்களுடன் ஆக்கங்கள் பிரசுரமாகி உள்ளதனைக் குறிப்பிடலாம்.

சொந்தப் பெயரோ புனை பெயரோ ஆக்க கர்த்தாவின் முகம் தெரியாமல் வாசிப்பை வாசகன் கடந்து போகக் கூடாது என்ற நிலைப்பாட்டை வரவேற்கிறேன். இந்தப் பண்பாடு சமகாலத்தில் பெருமளவில் தமிழ் இலக்கிய உலகில் கடைப்பிடிக்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களும் தீர்வுகளும், இலங்கையின் கல்வி

# டிப்ரஷனைப் போக்க ஓர் எளிய உபாயம்



எங்கு பார்த்தாலும் டிப்ரஷன் டிப்ரஷன் என்றே புலம்புகிறர்கள் என்று சீனி எழுதியிருந்தார். ஆமாம், உண்மைதான். ஆனால் எனக்கு டிப்ரஷன் என்றால் என்ன என்று தெரியாது. தெரிந்தவர்களைத் தெரியும். ஆனாலும் டிப்ரஷன் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளவே முடியவில்லை. எனக்கும் டிப்ரஷன் வந்திருக்கலாம். ஆனால் அதுதான் டிப்ரஷன் என்று கண்டுகொள்ளும் ஆற்றல் எனக்கு இல்லாதிருந்திருக்கலாம். டிப்ரஷனுக்குத் தமிழ் வார்த்தையும் தெரியவில்லை.

எனக்கு உணவு விஷயமாகத்தான் டிப்ரஷன் வருவதாகத் தோன்றுகிறது. அதாவது, அந்த மன உணர்வுதான் டிப்ரஷன் என்றால்.

நேற்று அன்னபூர்ணியிடம் சொல்லி கை மணம் என்ற உணவகத்திலிருந்து நண்டுக் குழம்பு வரவழைத்தேன். பார்த்ததுமே ஏற்பட்ட மன உணர்வை டிப்ரஷன் என்றுதான் சொல்லவேண்டும். மீண்டும் களி. மீண்டும் சேறு. ஒரு டம்ளர் தண்ணீரை ஊற்றி சுட வைத்து உண்டேன். ஏதோ பரவாயில்லாமல் இருந்தது.

**சாரு நிவேதிதா**

நான் ஒரு ரசம் அடிக்ட் என்று சமீபத்தில்தான் தெரிந்துகொண்டேன். ரசம் இல்லாமல் என் சாப்பாடு முழுமை அடையாது. ஆனால் பல உணவகங்களில் ரசம் வைக்கத் தெரிவதில்லை. ஒரு சில இடங்கள் விதிவிலக்கு. ஷேரோ ஹோம் ஃபுட் பரவாயில்லை. அதே போல் வாணி ஷங்கர் கிச்சனும் நன்று.

நேற்று அடைந்த டிப்ரஷன் காரணமாக, இன்று சுப்ரீம் மீன் கடை என்ற கடையிலிருந்து நெய் மீன் வரவழைத்தேன். ஒன்பது மணிக்கு ஆர்டர் கொடுத்தது. இன்னும் வருகிறது. இதைத் தட்டச்சு செய்யும்போது மணி பதினொன்று. இப்படி வரும் மீன் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. ஜார்ஜ் டவுனிலிருந்து வரவேண்டும். ஆள் கிளம்பி விட்டார் என்று தெரிந்தது. இனிமேல் அலுப்பு பார்க்காமல் நானேதான் கடைக்குச் சென்று மீன் வாங்கி வர வேண்டும் போலிருக்கிறது.

*** *** ***

சுப்ரீம் மீன் கடைக்கு இன்றோடு டாட்டா காண்பித்து விட்டேன். ஒன்பது மணிக்கு ஆர்டர் கொடுத்து பதினொன்றரை மணிக்கு வந்தது. மீன் நன்றாகத்தான் இருந்த்து. ஆனால்- அரசு மீன் அங்காடியில் மீன் விலை லோக்கல் மீன் மார்க்கெட்டைவிட இரட்டிப்பாக இருக்கும். இந்த சுப்ரீம் மீன் கடையில்

முறைமை, புலம்பெயர்தல் ஊடாக உருவாகும் சமூகக் கட்டமைப்பு, ஈழத்துச் சினிமா, தங்க முதலீடு உள்ளிட்ட பல்வேறு சமகால விடயங்களை ஆராயும் கட்டுரைகளையும் அற்புதமான கதைகள், கவிதைகளையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. குறிப்பாக கொடி என்ற புகழ்பெற்ற சிறுகதை மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதைத்தவிர, சிறுவர் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

வழமையான மரபு சார்ந்த கலை இலக்கிய இதழ் என்ற பரப்பிலிருந்து மாறுபட்ட வேவேறு களங்களை உள்ளடக்கி உள்ளம் மலர்ந்துள்ளது சிறப்பிற்குரியது. சஞ்சிகையின் சமகால உலகத்தைப் படம் பிடித்து மலர்ந்துள்ளது கனதியை அதிகரித்துள்ளது.

இதில் எனக்குப் பிடித்த அம்சங்களில் ஒன்றாகச் சொல்விழை எனும் பெயரில் உள்ள குறுக்கெழுத்துப் போட்டியைச் சொல்லலாம். குறுக்கெழுத்துப் போட்டி பழையதொரு எழுத்துப் பண்பாடாக இருந்தாலும் அதன் மொழி ஆளுமையின் கனதி உயரியது.

உள்ளத்தின் ஆக்கங்களை உள்ளபடி சொல்லப் போனால் கருத்துரை மிக நீண்டதாக அமையும். இந்த இலைக்கிய இதழின் ஆசிரியர், ஆசிரியர் குழாத்தின் சோர்விலாத தேடல் மூன்று மாதங்கள் வரையில் சோர்விலாமல் இரசித்து இரசித்து வாசிக்கக் கூடிய அற்புதமான கலைப் பொக்கிசமொன்றைத் தந்துள்ளது.

இதனை சமூக வலைத் தளங்கள் ஊடாக அனைத்துலகத் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பகிர்தல், வாசிக்கச் செய்தல் எனும் பணியை முன்னெடுத்தல் சாலச் சிறந்தது.

உள்ளதை உள்ளபடியே கூறும் உள்ளத்தின் தொடர்ச்சிக்கு எழுத்துலகம் தொடர்ந்தும் கைகொடுக்க வேண்டும்.

அரசு அங்காடியை விட அரை மடங்கு அதிகம். இன்று நான் வாங்கிய நெய் மீன் கிலோ என்ன விலை என்று கேட்டேன். 1900 ரூ. ஒரு கிலோ, மக்களே! சைவர்களெல்லாம் எத்தனை அதிர்ஷ்டசாலிகள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். விலையைக் கேட்டதும் எனக்குப் புத்தகப் பிரியர்களின் அங்கலாய்ப்பு ஞாபகம் வந்தது. ஆயிரம் பக்கப் புத்தகத்துக்கு ஆயிரம் ரூபாய் விலை வைத்தால் ஐயோ ஐயோ விலை அதிகம் என்று அழுகிறார்களே, இப்படி வஞ்சிரத்தின் விலை கிலோ 1900 ரூபாய் என்றால் யாராவது அது பற்றிக் கவலைப்படுகிறோமா?

முதலில் சின்ன வெங்காயத்தையும் பூண்டையும் உரித்து வைத்துக் கொண்டேன். மீனை ஏற்கனவே சுத்தம் செய்திருந்தார்கள். அதனால்தான் அந்த விலை போல. அவந்திகா தயாராக செய்து வைத்திருந்த குழம்புப் பொடியையும் உப்பையும் மீன் துண்டங்களில் கலந்து 'மேரினேட்' பண்ணினேன். ஒரு மணி நேரமாவது குழம்புப் பொடியில் மீன் ஊறினால்தான் சுவை கூடும். வறுக்க வேண்டிய மீனையும் அதேபோல் செய்தேன். அதில் மட்டும் நீருக்குப் பதிலாக எலுமிச்சை சாறு சேர்த்தேன்.

தக்காளியையும் நறுக்கிக் கொண்டேன். ஏற்கனவே புளியை ஊறப் போட்டாயிற்று.

மண் சட்டியில் எண்ணெயை ஊற்றி சின்ன வெங்காயத்தையும் பூண்டையும் கொஞ்சம் கறிவேப்பிலையையும் போட்டு வதக்கினேன். எடுத்த எடுப்பில் தக்காளியைப் போடக் கூடாது. தக்காளிக்குப் பிறகு வெங்காயம் பூண்டு எல்லாம் போட்டால் வெங்காயம் பூண்டின் பச்சை வாசம் போகாது. பூண்டும் வெங்காயமும் நன்கு வதங்கியதும் அதில் தக்காளியைப் போட்டு இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி வதக்கினேன்.

மேரினேட் செய்து வைத்திருந்த மீனில் இரண்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி மீனை லேசாகக் கழுவி அந்தத் தண்ணீரை சட்டியில் இருந்த பூண்டு வெங்காயம் தக்காளிக் கலவையில் ஊற்றி நன்கு கொதிக்க வைத்தேன். பிறகு புளிக் கரைசல். மீண்டும் கொதி. கடைசியாக மீனை எடுத்துப் போட்டு இன்னும் ஒரு கொதி. ஐந்து நிமிடம்தான். பிறகு ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, சீரகம், கறிவேப்பிலை போட்டு தாளித்து குழம்பில் விட்டு, ஏற்கனவே நறுக்கி வைத்திருந்த கொத்துமல்லித் தழை ஒரு கைப்பிடியைப் போட்டு மூடி வைத்தேன். நெய் மீன் குழம்பு ரெடி.

**டிப்ரஷன் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளவே முடியவில்லை. எனக்கும் டிப்ரஷன் வந்திருக்கலாம்.**

குழம்புப் பொடியில் மீனை மேரினேட் செய்வதற்காகக் கலந்ததில் கை விரல்களெல்லாம் இன்னமும் எரிகிறது. அவந்திகாவிடம் உனக்கு எரியுமா என்று கேட்டேன். "மிளகாய்த் தூளைப் போட்டுக் கலந்தால் கை எரியாதா? இதெல்லாம் ஒரு மேட்டரா?" என்றாள்.

"முப்பது ஆண்டுகளாக ஏன் நீ இதை என்னிடம் சொல்லவில்லை?"

முதலில் சொன்னதையே மறுபடியும் சொன்னாள்.

எல்லாம், வழி தவறி அப்ராமணன் ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்ட அய்யங்கார் அகத்துக்காரி ஒருத்தி செய்யும் மீன் குழம்பு முறை. மற்றபடி, அப்ராமணர்கள் மீன் குழம்பு எப்படிச் செய்வார்கள் என்று நீங்கள் சொன்னால் அடியேன் அடுத்த முறை அதையும் முயற்சிக்கிறேன்.



# தினைப் பொங்கல்



சிறுதானியங்களில் முக்கியமானது தினை. தினையில் பல ஊட்டங்கள் அடங்கியுள்ளன. நீரழிவு நோயாளர்களுக்கு ஏற்றது என்று பரிந்துரைக்கப்படுகிறது. உலகிலேயே அதிகம் உற்பத்தி செய்யப்படும் சிறு தானியங்களில் ஒன்று. தினைக்கதிரானது நரியின் வாலைப்போல பச்சை நிறத்தில் காட்சியளிப்பதால் ஆங்கிலத்தில் இதை 'பொக்ஸ் டைல் மில்லட்;'' என அழைக்கின்றனர். உலகிலேயே அதிகம் பயிரிடப்படும் இரண்டாவது தானிய வகை இது.

முருகன் வயதான தோற்றத்தில் சென்று வள்ளியிடம் சாப்பிடுவதற்குத் தினை மாவு கேட்டதாகப் புராணக் கதையுண்டு. அந்தளவுக்குப் பெயர்போன தானியம் தினை. சுவை மிகுந்த அதை இன்றைக்குப் பயன்படுத்துவோர் குறைவு. அத்தகைய தினையில் இந்த வாரம் பொங்கல் செய்து சுவைப்போம்.

சமையல்
சமையல்

**தேவையான பொருள்கள்...**

தினை 1 டம்ளர், பயறு அரை டம்ளர், சீரகம் ஒரு தேக்கரண்டி, மிளகு அரைத் தேக்கரண்டி, கறிவேப்பிலை, தேங்காய் எண்ணெய், உப்பு, நெய் ஆகிய தேவையான அளவு.

தினையைக் கழுவிச் சுத்தப்படுத்திச் சிறிது நேரம் நீரில் ஊற வையுங்கள். பருப்பையும் கழுவிச் சுத்தப்படுத்தி நீரில் ஊற வையுங்கள். பானை ஒன்றை அடுப்பில் வைத்து அது சூடாகியதும் தேங்காய் எண்ணெய் ஒரு மேசைக்கரண்டியளவில் விடுங்கள். தேங்காய் எண்ணெய் சூடாகியதும் சீரகத்தைச் சேருங்கள். கையோடு மிளகு, கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டுத் தாழியுங்கள். அவற்றோடு ஊற வைத்த தினை, உடைத்த பயறு ஆகியவற்றைச் சேர்த்துக் கிளறுங்கள். பின்னர் நீர் சேருங்கள். ஒரு டம்ளர் தினைக்கு 4 டம்ளர் நீர் சேர்க்கவேண்டும். பயறும் அரை டம்ளர் சேர்த்திருப்பதால் அதற்குமாக 5 டம்ளர் நீர் சேருத்துத் தேவையான அளவுக்கு உப்புச் சேர்த்து சில நிமிடங்கள் வரை மூடி அவிய விடுங்கள். அவிந்ததும் இறக்கி நெய் சேர்த்துச் சுவையுங்கள்.

# அப்ப என்னதான் நடக்கும்?



**கதிரேசன் காத்தவராயன்**

அதிலை வாசிசாலையடிக்குப் போவமெண்டு வெளிக்கிட சங்கரியரும் வந்தார். சேந்தே போனம். அங்கை முருகேசர் தம்பருக்கு எதையோ கொஞ்சம் கோவமாச் சொல்லிக்கொண்டிருந்தார். ''என்னப்பா முருகேசர் கொஞ்சம் சூடாய் இருக்கிற மாதிரிக் கிடக்குது?'' எண்டுகொண்டு இருந்திட்டன். தம்பர்தான் ''அது கதிரேசண்ணை'' எண்டு இழுத்துது ஒருமாதிரியாய்.

''இல்லை! கதிரேசண்ணை உந்தக் காரைநகர் றோட்டுப்பக்கம் போன்னீங்களே! சீய்க்! கிடந்த கேவலத்தைப் படுகேவலமாயல்லே ஆக்கி வைச்சிருக்கிறாங்கள்!'' எண்டு நிப்பாட்டினார் முருகேசர். நான் ''ஓஓஓ! என்னப்பா முருகேசு கிட்டத்திலை விழுந்தெழும்பினியளோ?'' எண்டதுக்கு தம்பர் சிரிச்சார். ''முருகேசண்ணை போனதோ விழுந்ததோ தெரியாது நான் பட்டபாடு? சரிஞ்சு போனன்... நல்ல காலம் காயமொண்டுமில்லை'' எண்டு தம்பர்தான் சொன்னார் வெக்கப்பட்டபடி.

முருகேசர் காரணமில்லாமக் கொதிச்சிராது ஏதோ குத்து வெட்டுகளை அறிஞ்சிட்டுதோ தெரியாது. அவற்றை வாயைக் கிண்டுவமெண்டுபோட்டு ''ஏனப்பா முருகேசு இடைக்கிடைதானே ரோட்டுப் போடாமலுக்குக் கிடக்குது?'' எண்டன். ''உண்ணாணைக் கதிரேசண்ணை உனக்குத் தெரியாதோ? இல்லாட்டில் என்ரை வாயைக் கிளறுகிறியோ?'' எண்டார் முருகேசர்.

''காரைநகர் யாழ்ப்பாணம் றோட்டைப் பற்றியல்லே கதைக்கிறியள்! அது நான் நினைக்கிறன் போட்டுக் கெடுத்தாச்செண்

73

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

சந்தர்ப்பம் என்பது அதிஸ்டம் என்கிற ஒரு விளக்கமும் எம்மிடையே உண்டு. அதிஸ்டம் என்பது உழைப்பின் மீது நம்பிக்கையற்றவர்களது சொத்து. அல்லது சோம்பேறிகளின் சொர்க்கம் (சொர்க்கம் என்பது உச்சமான கற்பனை என்பது நினைவிருக்கட்டும்) ஆக சோம்பேறிகளின் நம்பிக்கை. இல்லாத ஒன்றை நம்புவதானது இருப்பன மீதான நம்பிக்கையீனமே ஆகும் என்பதை உணர்ந்துகொள்வது அவசியமானது. சந்தர்ப்பம் வேறு அதிஸ்டம் (என்னெறான்று இருந்தால் அது) வேறு என்பதில் தெளிவு அவசியம்வேண்டும்.

சந்தர்ப்பங்கள் உள்ளவை. உருவாக்கப்படவும் கூடியவை. எனவே கையாள்வது இலகுவானது. கையாள்வது என்பதை விட அதனைத் தெரிவுசெய்வதும் பயன்படுத்துவதுமே முக்கியமானது. சந்தர்ப்பம் என்பது சூழல் மீதான தொடர் அவதானிப்பு மற்றும் அதிலிருந்து பெறுகிற ஒரு காலத்தினது சீரான ஓட்டம் தொடர்பானபட்டறிவு என்பவற்றினது பொருத்தமான தெரிவு. குறித்த செயலொன்றிற்கான சந்தர்ப்பம் செயலிற்காக நாம் தெரிவுசெய்யும் காலம் எனவும் கொள்ளமுடியும்.

வெறுமனே காலத்தை மட்டும் கவனத்தில்கொள்வது புத்தி பூர்வமானதல்ல. செயல் தொடர்பான அறிவு, ஆர்வம், பொருத்தம், செயல்திறன், இயலுமை, விளைவு, தேவை, அவசியம் போன்ற விடயங்களையும் கவனத்திற்கொள்வது சிறப்பானது. அவசியமானதும்கூட. எமது செயல்களின் விளைவுகள் தொடர்பான எதிர்பார்ப்பு எந்தளவும் இருக்கலாம். ஆனால் அதனைவிட சற்று அதிகமாகவேனும் மேலுள்ள விடயங்கள் கவனத்திலெடுக்கப்படல்வேண்டும்.



டல்லே?" எண்டு சங்கரியர் கதையிலை சேந்தார். "போட்டுக் கெடுத்தாச்சோ? அதென்ன ண்ணை புதுசாய்...?" எண்டு தம்பர் இழுக்க, "அதோ.. அது அச்சுப் பிழை" எண்டு முருகேசர் எரிச்சலாய்ச் சொன்னார்.

"அச்சுப் பிழையெண்டவுடனைதான் ஞாபகம் வருகுது, உந்த மாகாணப் பேப்பரெண்டொரு சோதினை நடக்குதாமல்லே, அந்தச் சோதினைப் பேப்பருகளிலை எக்கச்சக்கமான பிழையளாமல்லே கிடக்குது?" எண்டார் சங்கரியர். "அப்பிடியெண்டால் வாத்திமார் முதலிலை கேள்வியைத் திருத்திப்போட்டு பேந்து பிள்ளையள் எழுதின விடையளைத் திருத்தட்டும் எண்டேதும் முறையிருக்கோ என்னவோ?" எண்டு சிரிச்சார் முருகேசர்.

"அதுக்கு உப்பிடியோ தலையங்கத்திலை பாடத்தையே குழப்புறது? அதுகும் தமிழ்ப் பாடத்திலை, தமிழ்மொழியும் இலக்கியமும் எண்டதுக்குப் பதிலாய் தகவல்மொழியும் இலக்கியமும் எண்டோ?" எண்டு சங்கரியர் எரிச்சலோடை சொல்ல முருகேசர் 'அதை விடப்பா சங்கரி, குருக்கள் _ _ _ _ _ குற்றமில்லையில்லோ?" எண்டார் சிரிப்போடை. நாங்களுந்தான் சிரிச்சம்.

"பெரிய இடங்களிலைதான் பிரச்சனையளும் பெரிசாயிருக்குக் கண்டியளோ! நாங்கள் உதுகளை கண்டாலும் செய்யிரவைக்கு வேலையள் வலுகூட எண்டு அனுதாபந்தான் படவேணும்- இப்பிடிச் சிரிக்கக்கூடாது" எண்டு நான் சொன்னதுக்கும் சிரிச்சினம். "சரியாச் சொன்னியள் கதிரேசண்ணை - பிள்ளையள் பிழையைக் கண்டு பிடிச்சுச் சொன்னதுக்கு அவையின்ரை வாத்தியாரும் உப்பிடித்தான் சொன்னவராம் எண்டு என்ரை பேரன் சொன்னவன்" எண்டார் சங்கரியர்.

"எல்லாப் பெரிய இடங்களும் எங்களிலைதானே பழகுகிறது - அது கிடக்கட்டும் - இப்ப மண்ணெண்ணெய் என்ன மாதிரி?" எண்டுது தம்பர் திடீரெண்டு. "வழக்கம் மாதிரித்தான் சிவப்புக்கலரிலை தண்ணியாய்" எண்டு முருகேசர் முடிக்கயில்லை "விசயந்தெரிஞ்ச ஆளெண்டல்லே நினைச்சன்.." எண்டு தம்பர் முறைச்சுக் கொண்டு இழுக்க முருகேசர் நெளிஞ்சார்.

"ம்ம்ம் - இப்ப ஒரு கதையோ விளக்கமோ இல்லை - வந்து இறங்கின பிறகுதான் காட்டுக்கோ வரிசைக்கோ அதுக்கும் கியூஆறுக்கோ இல்லாட்டிலுக்கு சனத்தை சாப்பாடு தண்ணியோடை வரிசையிலை விட்டோ குடுக்கிற தெண்டு ஆளுக்காள் பிடிபட உள்ளாலையும் வெளியாலையும் கள்ளச் சந்தைக்குப் போகு டுமோ தெரியாதல்லே?" எண்டு சங்கரியர் சொல்ல "ஓஓஓ முதலிலை பெற்றோல், டீசல் ஏன் எரிவாயுவும் அப்பிடியல்லே போனது?" எண்டார் தம்பர்.

"பெரியவைதான் முந்தின அனுபவங்களை வைச்சு சரியான முடிவுக்கு வந்து சனத்துக்கு நேரகாலத்தோடை சொல்லவேணும். அப்பிடிச் செய்தால் அவையின்ரை தொழிலல்லே பலபக்கத்தாலையும் பாதிச்சுப்போகுடும்" எண்டு முருகேசர் சிக்கலான ஏரியாவுக்குள்ளை உள்ளடவெளிக்கிட்டார். "இஞ்சார் முருகேசு. எல்லாம் அவைதான். யாமறியோம் பராபரமே!" எண்டபடி எழும்பி வந்திட்டன்.

எதனையும் எவ்வாறு செய்வது என் பதிலுள்ள கவனம் எப்போது செய்வது என்பதிலும் இருப்பது அவசியமானதே. அதனைத்தான் சரியான சந்தர்ப்பத்தில் செய்தல் எனபதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பம் இயல்பாகவே இருப்பதா? உருவாக்கப்படுவதா? இரண்டு விதமாயும் இருக்கக்கூடியதே சந்தர்ப்பம். எப்படி?

வணிகமொன்றினை எடுத்துக்காட்டுக்காக எடுத்துக்கொண்டால் குறித்தவொரு பொருளுக்கான கேள்வி இயல்பாகவும் எழலாம். உற்பத்தியிலேற்பட்ட தடங்கல், திடீர் அறிமுகத்தால் கையிருப்பு குறைந்தோ முடிவடைந்தோ கூட ஏற்படக்கூடியது. விலையைக் கண்டபடி அதிகரித்து கூடிய இலாபத்தை குறுகிய காலத்துள் ஈட்டமுடியும். அதேவேளை குறித்த பொருளைச் சந்தையிலிருந்து மறைத்து (பதுக்கி) கேள்வியை உருவாக்கி (இரகசியமான முறையில்) கூடிய விலையில் விற்றும் அதிக இலாபமீட்ட முடியும். இது உருவாக்கப்பட்ட சந்தர்ப்பம்.

இதுவே அரசியலிலும் சரி ஆன்மீகத்திலும் சரி நடந்துவருகிறது. தேவையை சரியாக மதிப்பீடு செய்வதனூடாக இலகுவாக சாத்தியமாக்கப்படக்கூடியது. தேவையை இனங்காணல் மற்றும் அந்தவேளையில் அதனை ஈடுசெய்தல் என்பவற்றைக்கூட (சரியான) சந்தர்ப்பமாகக் கொள்ளமுடியும். மொத்தத்தில் சந்தர்ப்பம் என்பதைக் கண்டடைதல் எமக்குள்ளேயே நடக்கும் ஒரு தொடருறு செயலே. அது வெளிப்புறச்சூழல் தொடர்பான உள்ளக செயல்விளைவே.


வெளிப்புறச் சூழல் தொடர்பான உள்ளகச் செயல் விளைவா? அப்படியொன்று இருக்கிறதா? இருக்க முடியுமா? போன்ற வினாக்கள் எழுகின்றனவா? எழவேண்டும். வெளிப்புறச் சூழல் தொடர்பான உறுத்துகையானது எமது ஐம்பொறிகள் வாயிலாக எமக்குக் கிட்டுகிறது. அது எம்மிடமிருக்கிற மனத்தினது அறிதல், புரிதல் அடிப்படையில் நிரலாக்கப்படுகிறது. தேவை எதிர் தேவையற்றது, அவசியமானது எதிர் அனாவசியமானது, சாதகமானது எதிர் பாதகமானது, நன்மையானது எதிர் தீமையானது போன்ற முரணிகளாலாக்கப்பட்ட எமது உள்ளக இருப்புகளை கேள்விகளாயும் பதில்களாயும் ஆக்க முயல்கிறது.

கேள்விகளுக்கான பதில்கள் எமது நம்பிக்கை, நம்பிக்கை என நம்பிக்கொண்டிருக்கிற நம்பிக்கையீனம், நம்பிக்கையீனம் என நம்பிக்கொண்டிருக்கிற நம்பிக்கை, நம்பிக்கையீனம் என ஏதோ ஒரு வடிவத்தைத் தனது தீர்மானமாக எடுத்துக்கொள்கின்றன. இவை எமது மனதினது உருவாக்கமாக இருந்துகொள்கிறது. ஏற்கனவே மனத்தை ஆக்கிரமித்திருக்கிறவை எவையோ அவை சார்பான தீர்மானமாகவே அனேகமாக இருந்தும் விடுகின்றன. மாறாக அமைந்துவிடின் மனம் பேதலித்துப்போகிறது. விபரீதமாகப் போய்விடுகிறது.

ஆனால் மனந்தான் ஓரிடத்திலிருந்தறியாததாயிற்றே? தானடைந்த தீர்மானம் சரியானதா? தவறானதா? என மீண்டும் சலனப்படத் தொடங்குகிறது. எடுத்த தீர்மானமே இப்போது கேள்வியாகி விடுகிறது. ஆகப் பதிலுக்குப் பதிலாக கேள்வியே மீண்டும் கிடைத்திருக்கிறது. இதனது தொடங்கு புள்ளி மறந்து போக சுழலத்தொடங்குகிறது எண்ணம். அது எப்போது ஓய்வடையும்? சாவின்போதா? சிந்திப்போம்.

---

# முடி உதிரும் பிரச்சினைக்குத் தீர்வு



**கணேசன்**

வீட்டில் செல்லப் பிராணிகள் வளர்ப்பதற்கும் முடி உதிர்வதற்கும் தொடர்பு இருக்கிறது என்றால், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாகத்தான் நினைப்பீர்கள். ஆனால், அதுவும் சாத்தியமே! எப்படி?

என் மருத்துவ நண்பர்களில் ஒருவர் சருமநல மருத்துவர். அவர் சொன்ன சம்பவத்தை உங்களுக்குப் பகிர்ந்தால் அது புரியும்.

இல்லத்தரசி புனிதா ரொம்பவும் வசதியானவர். வீட்டில் நாய், பூனை, கிளி என "செல்லங்களை" வளர்ப்பதில் பிரியம் கொண்டவர். அவருக்கு ஒருமுறை தலைமுடி உதிரும் பிரச்சினை மாதக்கணக்கில் நீடித்தது. அலோபதி, ஹோமியோபதி, நேச்சுரோபதி, சித்தா எனச் சகலத்தையும் பார்த்துவிட்டார். அவருடைய தலையில் பூஞ்சை இருப்பதுதான் முடி உதிரக் காரணம் என்று எல்லோரும் கோரஸ் பாடினார்கள். ஆனால், அதிலிருந்து மீளத்தான் வழி சொல்லவில்லை. அவர் சிகிச்சை பெறும்போது மட்டும் முடி உதிர்வது நிற்பதும், சிகிச்சையை நிறுத்தியதும் மறுபடி வேதாளம் முதுகில் ஏறிக் கொள்வதுமாக நாட்கள் கடந்தன.

கடைசியாக, அவர் என் நண்பரைச் சந்தித்திருக்கிறார். அப்போது அவருடைய வளர்ப்புப் பூனைக்கும் சருமத்தில் பிரச்சினை. நண்பரின் மருத்துவமனைக்கு வரும் வழியில் விலங்குநல மருத்துவரும் இருந்ததால், அங்கு பூனைக்குச் சிகிச்சை பெற்றுக்கொண்டு, அவருக்குச் சிகிச்சை எடுக்க வந்திருக்கிறார். அப்போதுதான் இத்தனைக் காலமும் புரிபடாது இருந்த புனிதாவின் புதிர் அவிழ்ந்தது.

புனிதாவின் சரும நோயும் அவர் பூனைக்கு இருந்த சரும நோயும் ஒன்றுதான். புனிதா அந்தப் பூனையை மடியில் வைத்துக்கொண்டு முகம் உரசிக் கொஞ்சுவார் என்பதால், பூனையிடமிருந்து புனிதாவுக்கு அந்தச் சரும நோய் ஒட்டிக்கொண்டு விட்டது. இந்தக் "கம்பசூத்திரத்தை" என் நண்பர்தான் கண்டுபிடித்திருக்கிறார். எனவே, புனிதாவிடம், "இந்தப் பூனையின் பிடியிலிருந்து விலகினால்தான் உங்கள் தலையிலிருக்கும் பூஞ்சை விலகும். அப்புறம் உங்கள் தலைமுடி உதிர்வது நிற்கும்!" என்று அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். அது உண்மையானதும், சந்தோஷம் தாளாமல், ஒரு 'டாபர்மேன்' நாயை என் நண்பருக்கு அன்பளிப்பாகத் தந்திருக்கிறார்.

ஆக, முடி உதிரும் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டுமானால், தலை சீவும் சீப்பிலிருந்து வளர்ப்புப் பிராணிகள் வரை கவனிக்க வேண்டும். அப்போதுதான் இதற்கு உண்மையான காரணம் தெரியும்; சரியான சிகிச்சை எடுக்க முடியும்.

**என்ன செய்யலாம்?**

ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். முடிப் பிரச்சினைக்காக விளம்பர மருத்துவர்களை நம்பாதீர்கள். அனுபவம் கூடிய சரும மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள். இந்தப் பிரச்சினைக்கான அடிப்படை கோளாறை முதலில் சரிப்படுத்துங்கள். அதற்குச் சில குருதிப் பரிசோதனைகளும் சரும திசு ஆய்வும் தேவைப்படும். அடுத்து, "முடியின் வேர்க்காலில் உயிர் இருக்கிறதா? மறுபடியும் அதை வளரச் செய்ய முடியுமா?" என்று தெரிந்துகொள்ளவும் சிறப்புச் சோதனைகள் உள்ளன.

தலைமுடி ஆரோக்கியமாக இருக்க, குழந்தை முதலே அக்கறை வேண்டும். முக்கியமாக, முடி பராமரிப்பு, உணவின் மீதான கரிசனம், நலம் காக்கும் வாழ்வியல் - இவைதான் அடர்த்தியான முடிக்கு ஆர்கானிக் உரங்கள். ஆனால், இன்றைக்குத் தும்பைவிட்டு வாலைப் பிடிப்பவர்கள்தான் அதிகம்.

தினமும் குளித்து முடித்து முடி உலர்ந்ததும் கொஞ்சமாகத் தேங்காய் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் போதும். தலைக்குக் குளிக்க எந்த ஷாம்பும் ஆகாது. சந்தன சோப்பும் சிகைக்காயும் நல்லது. ஹேர் கண்டிஷனர் தேவையே இல்லை. தலை வாருவதற்கு மரச்சீப்புதான் சரி. கடினமான சீப்பினால் அடிக்கடி தலைவாரினால், முடியின் முனை பிளவுபடும். அதிக சூடான வெந்நீரில் குளிப்பது, ஹேர் டிரையர் பயன்படுத்துவது, பிளீச் செய்வது, தலைச்சாயம் பூசுவது, ஹேர் கலரிங் - எல்லாமே முடிக்கு நாம் செய்யும் துரோகம்.

தலைமுடி உதிரத் தொடங்கியதுமே சில ஹார்மோன் மாத்திரைகளைச் சாப்பிட்டு வந்தால், அடுத்த முடி கொட்டாது. ஆனால், இது நிரந்தரத் தீர்வு ஆகாது. 'மினாக்சிடில்' (Minoxidil) எனும் தைலத்தைத் தடவ ஓரளவு முடி வளரும். ஆனால், இந்தத் தைலத்தையும் தொடர்ந்து தடவ வேண்டும். அதோடு டென்ஷனைக் குறைப்பது, பரபரப்பைத் தவிர்ப்பது, குடும்பத்தில் சச்சரவு இல்லாமல் பார்த்துக்கொள்வது, கவலைகளைக்






கழற்றிப்போடுவது, நேரத்தோடு உறங்குவது போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களும் தேவை.

விருந்தென்றால் இனிப்பு கட்டாயம். முடியென்றால் ஊட்டச்சத்து முக்கியம். மீன், ஈரல், அடர் பச்சைக் காய்கறிகள், கீரைகள், பேரீச்சை, கேரட், முட்டை, பருப்பு, சுண்டல், பால், பால் பொருள்கள், சிறுதானிய உணவுகள், சோயாபீன்ஸ், காளான், திராட்சை, ஆரஞ்சு, முந்திரி, மாதுளை, உலர் அத்தி, பாதாம், பிஸ்தா, வாழைப் பழம், நெல்லி, கறிவேப்பிலை -முடிக்குப் பிடித்த உணவுகள் இவை! சாப்பிட்டுப் பாருங்கள். கருமையான கூந்தலை அள்ளி முடியலாம்.

**வழுக்கைக்குச் சிகிச்சை!**

காற்றில்லாத பலூனால் பறக்கமுடியாது. அதுபோல் வழுக்கைக்கு மருந்து கிடையாது. பிஆர்.பி (PRP - Platelet Rich Plasma) சிகிச்சை சிலருக்கு உதவுகிறது. இது பயனாளியின் குருதியிலிருந்து தட்டணுக்களைப் பிரித்தெடுத்து, மறுபடியும் அவர்கள் தலைச் சருமத்தில் ஊசிமூலம் செலுத்தப்படும் குருதிச் சிகிச்சை. இது சரிப்படாதவர்களுக்கு 'முடி மாற்று சிகிச்சை' (Hair transplantation) கைகொடுக்கிறது. இதில் பின்னந்தலையில் உள்ள முடியை வேரோடும் தோலோடும் எடுத்து வழுக்கை உள்ள இடத்தில் நாற்று நடுவதைப்போல் நடுகிறார்கள். வழுக்கையில் முடி வளர இது ஒன்றுதான் தற்போதைய வழி! தன் தடுப்பாற்றல் (Auto immune disease) தரும் - அலோபீசியா ஏரியேட்டா - எனும் நோயின் காரணமாக முடி உதிரும் பிரச்சினை உள்ளவர்களுக்கு - பேரிசிடினிப் - (Baricitinib) மருந்து பலன் தருகிறது. தலையில் கத்திபடக் கூடாது. ஊசி சொருகக் கூடாது என்றால், இருக்கவே இருக்கிறது, 'விக்!



# ஸ்பைவேர் எனும் டிஜிட்டல் ஆயுதம்

**ஹரி**



பொதுமக்கள் தொடக்கம் சக்தி வாய்ந்த அரசியல் ஆளுமைகள் வரை அலறவைக்கும் ஒரு பெயர் 'ஸ்பைவேர்' எனும் உளவுநிரல். இயங்குதளம் கொண்டு இயங்கும் அனைத்து டிஜிட்டல் சாதனங்களிலும் ஊடுருவி, நுழைந்த சுவடே தெரியாமல் மறைந்திருந்து, நமது தகவல் இரகசியங்களைக் கைப்பற்றும் ஒற்றன்தான் இந்த ஸ்பைவேர். மற்றவைபோல நாம் தேவையற்ற எதையாவது கிளிக் செய்து வைத்து, அதனால் உள்ளே நுழையும் பொருள் இல்லை இது. பயனர் தரப்பில் எதுவுமே செய்யவில்லை (Zero Click) எனினும், ஒரு நுண்ணுயிரிபோல இயங்குதளத்தில் இருக்கும் பலவீனங்களைப் பயன்படுத்தி நொடியில் சாதனங்களில் உள்நுழைந்துகொள்ளும். அத்தனை சக்தி வாய்ந்தது.

ஸ்பைவேர் எனப்படும் உளவுச் செயலியை உருவாக்கி உலக நாடுகளின் அரசுகளுக்கும், இதர அமைப்புகளுக்கும் பெரும் தொகைக்கு விற்பது இன்றைய தேதியில் லாபம் கொழிக்கும் தொழில். பல நாடுகளின் சைபர் தொழில்நுட்ப நிறுவனங்கள் இந்தப் போட்டியில் இருக்கின்றன. அரசியலர்கள், அரசு உயர் அதிகாரிகள், பிரபலங்கள், பத்திரிகையாளர்கள், எதிரி நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள் ஆகியவற்றை உளவு பார்ப்பதற்காக இந்த ஸ்பைவேர்களைப் பெரும் தொகைக்கு விற்கிறார்கள்.

அப்படியோர் டிஜிட்டல் ஆயுதமாக உருவாக்கப்பட்டதுதான் பெகசஸ் உளவுநிரல். உலக நாடுகளில் உளவிற்குப் பெயர் போன இஸ்ரேலின் தயாரிப்பு இது. இஸ்ரேலின் 'என்எஸ்ஓ' (NSO) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டாலும் இதன் பயன்பாட்டு உரிமம் இஸ்ரேல் அரசு வசமே இருக்கிறது. இந்திய அரசு உள்பட நட்பு ரீதியாகப் பல நாடுகளின் உதவிக்கும் பெகசஸை விற்றுள்ளது இஸ்ரேல்.

**பெகசஸ் எப்படி மொபைலில் ஊடுருவுகிறது?**

**இது தெரியாதா?**

'என்னை க்ளிக் செய்!' என வம்படியாக வரும் வாட்ஸப் செய்திகள், மின்னஞ்சல்கள்போல இது லோக்கல் உத்தி இல்லை. எதைத் திறக்கவேண்டும், திறக்கக் கூடாது என்ற விழிப்புணர்வு நம்மில் பெரும்பாலானோருக்கு இருக்கும்போது உலகின் சக்தி வாய்ந்த ஆளுமைகளுக்கு இருக்காதா என்ன! ஆகையால், பெகசஸ் விசேஷமாக உருவாக்கப்பட்டது.

முதல்வர் அலுவலகத்தின் முக்கிய அறையில் ஒரு திருடன் ஒளிந்துகொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அங்கு நடக்கும் முக்கிய விவாதங்கள், எடுக்கப்படும் முடிவுகள் என அனைத்தையும் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறான். ஒருநாள், இரண்டு நாள் அல்ல, ஒரு வருடம் இருக்கிறான் என்றால் நம்ப முடியுமா? நான்சென்ஸ், லாஜிக்கே இல்லை. அத்தனை பாதுகாப்பு மிக்க இடத்தில் இது எப்படி சாத்தியம்! முதலில் உள்ளே நுழையும்போதே பிடித்துவிடுவார்கள், பிறகு எப்படி? இது எல்லாம் மீறி அவன் இருந்தான் என்றால் அவன் நிச்சயம் மனிதனாகவே இருக்க முடியாது. பேயாகத்தான் இருக்க முடியும் என நீங்கள் சிரித்தால் அதுதான் உண்மை. பெகசஸ் மற்ற செயலிகள்போல அல்ல, அது ஒரு பேய்.

இதை மொபைலுக்கு சுமந்துவருபவற்றை 'வெக்டர்' என்பார்கள். அது ஒரு வாட்ஸப் செய்தியாக இருக்கலாம், மின்னஞ்சலாக இருக்கலாம், போன் அழைப்பாக இருக்கலாம் அல்லது ஒரு சாதாரண மிஸ்ட் காலாக இருக்கலாம். விசேஷம் என்னவென்றால் இந்த வெக்டர்கள் வந்த சுவடே உங்களுக்குத் தெரியாது.

மின்னஞ்சலாக வந்தால் அதன் இணைப்பு தானாகவே தரவிறக்கம் செய்துகொண்டு டெலிட் ஆகிவிடும்.

மிஸ்ட் அழைப்பாக வந்தால் வந்த சுவடு தெரியாமல் 'கால் லாக்' (Call log) எனப்படும் அழைப்பு விவரத்தில் இருந்து நீங்கிவிடும். வாட்ஸப் மெசேஜ், ஐ மெசேஜ் என எந்த வேடத்தில் வந்தாலும் இதேபோலத் தான். புராணப் படங்களில் வரும் கட வுள்போல வந்த வேலை முடிந்ததும் சட்டென்று மறைந்துவிடும். ஆனால், உண்மையில் அதன் உளவு வேலையை அப்பொழுதுதான் தொடங்கும்.

**மொபைல் / கணினியில் இது ஊடுருவியதும் பிற வணிக செயலிகளைப் போல தகவல்களை மட்டும் திருடுவதில்லை. காமிரா, மைக்ரோபோன், கீ போர்டு என மொத்த இயக்கத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடும்.**

**ஊடுருவிய பிறகு உளவுநிரல் என்ன செய்யும் ?**

மொபைல் / கணினியில் இது ஊடு ருவியதும் பிற வணிக செயலிகளைப் போல தகவல்களை மட்டும் திருடுவ தில்லை. காமிரா, மைக்ரோபோன், கீ போர்டு என மொத்த இயக்கத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடும். மொபைலில் அழைப்பு கள், எண் தொடர்புகள், எடுக்கப்படும் ஒளிப்படங்கள், நீங்கள் அனுப்பும் செய்திகள். வெறும் தட்டச்சு செய்து விட்டு அனுப்பாமல் டெலிட் செய்யும் செய்திகள் (வாட்ஸப் மறைநுட்பத் தகவல்கள் - Encrypted messages) உட்பட வலைதளங்களில் என்ன பார்க்கிறீர்கள், என்ன தேடுகிறீர்கள், எந்த இடத்தில் இருக்கிறீர்கள் என அனைத்தும் பெகசஸ் வசம்தான்.




இது மட்டுமல்ல, பெகசஸ் நினைத்த நேரத்தில் ஸ்க்ரீன்ஷாட் மற்றும் மொபைல் காமிரா மூலம் உங்களைப் படம் பிடித்து அதன் எஜமானனுக்கு அனுப்பிவிடும்.

பெகசஸ் மொபைலில் ஊடுருவியி ருப்பது துளியும் அதன் பயனருக்குத் தெரியாது. உண்மையில் மற்ற செயலி களின் 'ஏடி' (AD) சிக்கல்களைக்கூட பெகசஸ் சரி செய்து அதன் பயனருக்கு எந்த விதத்திலும் மொபைலை மாற்றும் எண்ணம் வராமல் சமர்த்தா கப் பார்த்துக்கொள்ளும். 60 நாட்கள் தனது சர்வருடன் தொடர்புகொள்ள முடியாமல் போனாலோ, இல்லை பய னருக்கு ஏதேனும் சந்தேகம் வரும்பட் சத்திலோ பெகசஸ் தானாக நீங்கிக் கொள்ளும் திறன்கொண்டது (பயனர் வலைத்தளங்களில் பெகசஸ் குறித்துத் தேடத் துவங்கினால் அலர்ட் ஆகிவி டும்).

பயனர் பாதுகாப்பில் நான் ஜாம்ப வான் என பீற்றிக்கொள்ளும் ஐபோன் கள்தான் இத்தாக்குதலின் மிக எளி மையான இலக்கு. அதன் இயங்குதளம் 100% பெகசஸிற்கு வணங்கிக் கட் டுப்பட்டுவிடுகிறது. ஆண்ட்ராய்டுகூட 50%தான். (மேலிடங்கள் பெரும் பாலும் ஐபோன்களை உபயோகிப் பதால் அதில் அதிக கவனம் செலுத் தப்பட்டிருக்கலாம்).

இஸ்ரேல் தயாரிப்பான பெகசஸ் ஸ்பைவேர் பிரபலங்களின் மொபைல் களை உளவு பார்த்த விவகாரம் கொஞ்சக் காலத்திற்கு முன்னர் இந்தி யாவில் பெரும் சர்ச்சையாக வெடித்து நீதிமன்ற விசாரணைகள் வரைகூடச் சென்றது. அது அடங்குவதற்குள் இப்போது அதே போன்ற ஹெர்மிட் ஸ்பைவேர் தனது அச்சுறுத்தலைத் தொடங்கி இருக்கிறது. இத்தாலி, கஜகஸ்தான், சிரியா மக்களை உளவு பார்ப்பதற்காக இத்தாலியைச் சேர்ந்த 'ஆர்சிஎஸ்' (RCS) லேப், ஹெர்மிட் எனும் உளவுநிரலை ஆண்ட்ராய்டு மற்றும் ஆப்பிள் போன்களில் நிறுவி யிருக்கிறது என கூகுள் தனது சமீபத் திய அறிக்கையில் எச்சரித்திருக்கிறது.

மற்ற ஸ்பைவேர்களைப் போலவே இதுவும் மொபைலில் நிறுவப்பட்டதும் மறைந்துகொள்ளும்தன்மை கொண் டதாகவே உருவாக்கப்பட்டிருக்கிறது, இப்போதைய அளவில் மூன்று நாடுக ளில் ஹெர்மிட் இருந்தாலும், விரை வில் இது உலகமெங்கும் பரவலாம் என எச்சரிக்கும் கூகுள், தங்கள் 'டேக்' (TAG) அறிக்கையில் ஹெர் மிட் ஸ்பைவேர் தாக்குதல் எப்படி நிகழ்த்தப்பட்டிருக் கிறது என்பதை விளக்கியி ருக்கிறார்கள்.

முதல் கட்டமாக ஒரு போலி இணைப்பை மெசேஜ் வாயிலாக அனுப்புகிறார்கள். அந்த லிங்கை கிளிக் செய்ததும் மொபைலின் இன்டர்நெட் சேவை துண்டிக்கப்படுகி றது. இன்டர்நெட் சேவை மீண்டும் பெற இதை டவுன்லோட் செய்யுங்கள் என சேவை மையத்திலி ருந்து அனுப்புவதுபோல ஒரு பைலை அனுப்புகி றார்கள். அது டவுன்லோட் செய்யப்பட்டதும் இன்டர்நெட் மீண் டும் சரியாக வேலை செய்கிறது. அனால், பின்னணியில் ஹெர்மிட் சமர்த்தாக மொபைலில் நிறுவி, மறைந்துகொள்கிறது.

பிறகு மொபைலில் உள்ள ஒளிப் படங்கள், வீடியோக்கள், அனுப்பப்

படும் மெசேஜ்கள், அழைப்புகள், லொகேஷன் என அனைத்தையும் யாருக்குத் தேவையோ அவர்களுக்கு க்ளவுட் சேவை மூலம் அனுப்பிவிடுகிறது. அது மட்டுமின்றி மைக்ரோபோனைப் பயன்படுத்தி மொபைலைச் சுற்றி நிகழும் அனைத்தையும் ரெகார்ட் செய்துகொள்ளும் ஹெர்மிட், கேமிராவையும் தனது தேவைக்கேற்ப உபயோகித்துக்கொள்கிறது.


இதில் முதல் கட்ட மெசேஜ், டவுன்லோடு செய்யப்படும் பைல் ஆகியவை அந்த போனின் தயாரிப்பு நிறுவனத்தின் லோகோ கொண்டபடி இருப்பதால் துளி சந்தேகம் வராமல் மக்கள் இதை தங்கள் மொபைலில் உள்வாங்கி இருக்கிறார்கள். இதை உருவாக்கிய 'ஆர்சிஎஸ்' (RCS) லேப், பாகிஸ்தான், சிலி, மங்கோலியா, வங்கதேசம், வியட்நாம் நாடுகளின் இராணுவ மற்றும் அரசுகளுக்கும் வேலை செய்கிறது. கொண்டுதான் இருக்கிறது. இது போன்ற தங்களது வாடிக்கையாளர்களுக்காக உலக அளவில் 50,000 எண்களை ஊடுருவியிருக்கிறது இஸ்ரேல். அதில் இந்திய அளவில் 300 எண்கள். இரண்டு அமைச்சர்கள் மற்றும் தேசியக் கட்சித் தலைவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எண்களும் இதில் அடங்கும்.

**ஸ்பைவேர்களில் இருந்து தற்காத்துக்கொள்வது எப்படி?**

மொபைலில் தேவையற்றுவரும் மெசேஜ்கள் மற்றும் பகிரப்படும் இணைப்புகளைக் க்ளிக் செய்வதைத் தவிருங்கள். க்ளிக் செய்தாலும் அதன் போலி இணையப் பக்கங்களில் உங்களது பயனர் கணக்கு மற்றும் கடவுச்சொல் தரவே தராதீர்கள். இஎக்ஸ்இ (exe) என இருக்கும் பைல்களை டவுன்லோட் செய்வதை அறவே தவிருங்கள்.

மொபைலை அப்டேட் செய்தாலும் அதன் சமீபத்திய வெர்சனுக்கு ஏற்ப ஸ்பைவேரும் அதை அப்டேட் செய்துகொள்ளும். ப்ளேஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஸ்டோர்களில் இருந்து மட்டும் செயலிகளை நிறுவுவதே பாதுகாப்பானது. வேறு தளங்களில் இருந்து செயலிகளை மொபைலில் நிறுவுவதைத் தவிர்க்க வேண்டும்.

காமிரா மற்றும் மைக்ரோபோன், இணையம் ஆகியவை தொடர்ந்து பயன்பாட்டில் இருப்பதால் மிக விரைவில் மொபைல் பேட்டரி இருப்பு தீர்ந்துவிடும். ஆகவே இதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். பேட்டரி நன்றாக இருந்து, அதிக தகவல் இல்லாமல், கணினியோ, மொபைலோ தொடர்ந்து அணைந்து, அணைந்து மீண்டும் உயிர்கொண்டால் உஷார். அதன் இயங்குதளத்தில் ஏதேனும் சிக்கல் நிகழ்கிறது என்பதே அதன் பொருள்.




ஆகவே, இந்த நாடுகளும் தங்கள் மக்களை உளவு பார்க்க ஹெர்மிட்டைப் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த சர்வ வல்லமையை உலக நன்மைக்காகவும், பயங்கரவியத்தைக் கட்டுப்படுத்தவும் மட்டுமே நாங்கள் உபயோகிக்கிறோம் என இஸ்ரேல் நீதிக்கதை சொன்னாலும், மக்களை உளவு பார்த்து, உண்மைகளை மறைக்க முனையும் எல்லா அரசுகளுக்கும் பெகசஸ் உதவிக்

மொபைல் / கணினியில் தேவையில்லாத விளம்பர பாப்அப் ஏதேனும் வருகிறதா என்று பாருங்கள். நீங்கள் பயன்படுத்தும் கணினியின் ப்ரவுசரில் ஏதேனும் 'இணைப்பான்கள்' (Extensions) அதுவாகவே சேர்ந்துகொண்டுள்ளதா என்பதைக் கவனியுங்கள். மொபைலில் பயன்படுத்தும் இன்டர்நெட் அளவை சோதியுங்கள். எந்தச் செயலி அதிகமாக பயன்படுத்துகிறது என்பதையும் கவனியுங்கள்.

கூகுள் டேக் (TAG) எனப்படும் தனது தனிக் குழு கொண்டு ஸ்பைவேர்களை உருவாக்கும் நிறுவனங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. ஒரு ஸ்பைவேரை முடக்கினால் வேறு பெயர்களில், முன்னேறிய தொழில்நுட்பத்தில் இவர்கள் தொடர்ந்து வர வாய்ப்பிருக்கிறது. ஆகவே, நாம்தான் நமது மொபைலின் செயல்பாட்டை தொடர்ந்து கண்காணிக்கவேண்டும்.

71



தர்மராசா

# சிறைக்குள்...

## மட்டக்களப்புச் சிறையில் போராட்டத்துக்கு இடையூறு

களுத்துறைச் சிறையில் 1998 மார்கழி 13ஆம் திகதியன்று உணவு தவிர்ப்புப் போராட்டமானது தமிழ் அரசியல் கைதிகளால் மீண்டும் தொடங்கப்பட்டது. 3 கோரிக்கைகளை முன்வைத்து அது தொடங்கப்பட்டது. பாதுகாப்பான சிறைக்குக் கைதிகளை உடனடியாக மாற்றவேண்டும், நடந்த சம்பவம் குறித்து வெளிப் படையான விசாரணையை உடனடியாக நடத்திச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கவேண் டும், சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட கைதி களைத் தண்டனை பெற்ற கைதிகளுடன் தடுத்து வைக் கக்கூடாது என்பனவே அந்தக் கோரிக்கைகள்.

புதிதாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான மட்டக் களப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரான வெள்ளிமலை என்பவர் 25.12.2001 அன்று மட்ட சிறைக்கு வருகை தந்து எம்மைச் சந்தித் தார். தேர்தல் பரப்புரை மேடையில் பேசுவதுபோல எம்மத்தியில் உரை நிகழ்த்தினார். எமது விடுதலையைத் துரிதப்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவிருக் கிறேன் என்றும் எமக்குச் சட்ட ஆலோசனை வழங்கு வதற்கு சட்டத்தரணிகள் அமையம் ஒன்றை வெளி நாட்டு நிதியுதவியுடன் அமைக்கவிருக்கிறேன் என்றும் சொன்னார்.

எல்லாக் கைதிகளிடமும் தனிப்பட்ட முறையில் பிரச்சினைகளைக் கேட்டார். அவரிடம் சொல்வதற்கு என்னிடம் எதுவும் இருக்கவில்லை. பொதுவான விடயத்தைப் பலரும் கதைத்தார்கள். அவர் கூறிய எதுவும் நடக்கவில்லை என்பதைத் தொடர்ந்தும் சிறை யிலிருந்தபோது தெரிந்துகொண்டேன்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தங்கவடி வேல் 26.12.2001இல் எம்மை வந்து சந்தித்தார். எந்த உத்தரவாதத்தையும் எமக்குத் தரவில்லை. பயங்கர வாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டால் மிக விரைவில் விடுதலையாகிவிடுவீர்கள் என்று எமக்குத் தெரிந்த பழைய கருத்தை அவர் புதிதாக எமக்குச் சொல்லித் தந்தார். நாம் கைதிகளாக இருக்கும் வரை யார் வந்து எதைச் சொன்னாலும் கேட்பதைத் தவிர வேறு வழியி

ருக்கவில்லை. கைதிகளைப் பொறுத்த வரையில் அதுவும் ஒரு பொழுதுபோக் குத்தான்.

வீடமைப்புப் பிரதியமைச்சரா இருந் தவரான பஷீர் தேகு தாவூத் 31.12. 2001 அன்று சிறைச்சாலைக்கு வந்து எமது பிரச்சினைகளைக் கேட்டறிந் தார். சட்டமா அதிபர் திணைக்களத் துடன் தொடர்புகொள்வதாகக் கூறி னாரே தவிர எமது விவரங்கள் எதை யும் அவர் பெறவில்லை. பின்னர் எதுவும் நடக்கவில்லை.

நான் சிறைக்குள் இருக்கும்போது நான் சந்தித்த முதலாவது உணவு தவி ர்ப்புப் போராட்டம் 1.2.2002 அன்று மட்டக்களப்பில் நடந்ததுதான். அது நானும் பங்குபற்றிய ஒரு நாள் அடை யாள உணவு தவிர்ப்புப் போராட்டம். களுத்துறைச் சிறையில் ஏற்கனவே உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தார்கள். 1.2.2002இல் பூசாவிலும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்;கப்போவ தாகப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிந்துகொண்டேன்.

இத்தருணத்தில் நாம் தமிழ்ச் சிறை ஒன்றில் தமிழ்ச் சூழலில் இருந்து கொண்டு உணவு தவிர்ப்புக்கு ஆதர வாகவேனும் செயற்படவேண்டும் என்ற முடிவுடன் விடுதலை கோரி அரசுக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுப் பதற்கு எமக்கிருந்த உரிமையையும் கடப்பாட்டையும் பயன்படுத்திக் கொண் டோம்.

மட்டக்களப்பில் இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு இன்னோர் காரணம், எல் லாச் சிறைகளிலும் நடக்கின்ற (களுத் துறை, பூசா, அனுராதபுரம், பதுளை, திருகோணமலை, யாழ்ப் பாணம், நீர் கொழும்பு, போகம்பரை, வெலிக்கடை பெண்கள் பிரிவு) உணவு தவிர்ப்புப் போராட்டம் பற்றிய செய்திகளை உட னுக்குடன் ஊடகங்களுக்கு அறிவிக் கும் வாய்ப்பு எமக்கிருந்தது. இந்த விடயத்தில் பல சிறைச்சாலைத் தமிழ் ஊழியர்கள், நண்பர்கள், ஊடகத் தொடர்புடையவர்கள் என எல்லோ ரும் உதவினார்கள்.

25.1.2002 அன்று களுத்துறைச் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட் டத்தைத் தொடங்கியிருந்தனர். அத ற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே மட்டக்களப்புச் சிறையில் சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டோம். 31.1.2002 அன்று காலையில் எல்லாப் பத்திரிகைகள், வானொலி - தொலைக் காட்சி ஊடகங்களிலும் நாடு முழுதும் தமிழ் அரசியல் கைதிகள் நாளை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத் தில் குதிக்கின்றனர் என்ற செய்தியும் மட்டக்களப்புச் சிறையிலும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறார்கள் என்றும் செய்திகள் வெளியாகின.

செய்தியை அறிந்ததும் தலைமை ஜெயிலர் ஸ்கந்தராஜா தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் தனது அறைக்குள் அழைத்தார். நலன்புரி அலுவர் சீனிவாசனை எம்முடன் கதைக்க விட்டார். நாங்கள் 41 பேர் அதில் கலந்துகொண்டோம். இது விட யமாகப் தலைமை ஜெயிலர் ஸ்கந்த ராஜா கூறும்போது, நான் 3 மாத விடுமுறையில் வெளிநாடு சென்றிருந் தேன். நாளை தான் பதவியை மீண் டும் பொறுப்பேற்கப் போகிறேன். இத் தருணத்தில் நீங்கள் உணவு தவிர்ப்பி ருப்பது எனது பதவிக்குப் பிரச்சினை யைத் தரும். எனவே நாளை தொடங் காமல் இரண்டு வாரமாவது காலம் தாழ்த்தித் தொடங்குங்கள் என்றார். இதைவிட, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். ஏற்கனவே இதைத் தடுத்திருக்கலாமே என்று சீனிவாசனைத் திட்டினார்.

(தொடரும்)




# டைரி

## சுவாரஸியத்திற்குக் குறைவில்லை!

எதிர்காலமும், இறந்த காலமும் நம் பக்கத்திலேயே இருக்கும். ஆனால், எல்லோரின் கண்களுக்கும் தெரியாது. அப்படித் தெரிந்தால்..? அதுதான் 'டைரி'. மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லும் பாதை யில் உள்ள 13ஆவது கொண்டை ஊசி வளைவில் அதிக விபத்துகள் நடைபெறுகின்றன. அதையொட்டி பல மர்மக் கதைகளும் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் நிலுவையிலிருக்கும் இந்த வழக்குகள் பயிற்சி காவலரான அருள்நிதி கைக்கு வந்து சேர, அவர் இது தொடர்பான விசாரணையில் இறங் குகிறார். பல திருப்பங்களைக் கொண்ட இந்த வழக்கில் இறுதியில் என்ன நடந்தது என்பதுதான் 'டைரி' சொல் லும் கதை.

படத்தின் மையக்கரு உண்மையில் சுவாரஸ்யமானது. குறிப்பாக, படத்தின் இறுதிக் காட்சி நம்மை நெகிழ வைக்கும் அதேசமயம் பேரார்வமூட்டுகிறது. படத்தின் பெரும் பலமே கடைசி ஒரு மணி நேரம்தான். அந்த ஒரு மணிநேரத்தை ஈடுக்கட்டுவதற்காக சுற்றி எழுப்பப்பட்ட சுவர்தான் மீதி நேர திரைக்கதை. எதிர்பார்ப்புடன் பாப் கார்னை எடுத்துக்கொண்டு திரையரங்கிற்குள் நுழைப வர்களுக்கு முதல் காட்சி மிரளவைக்கிறது. இனி பாப் கார்னுக்கு வேலையிருக்காது என அதை எடுத்து ஓரங் கட்டினால், அடுத்தடுத்து வரும் தேவையில்லாத காதல் பாடல், அயற்சி தரும் விசாரணை மீண்டும் பாப்கார்னை

கையில் சேர்த்துவிடுகிறது.

முதல் பாதி முழுக்க கதையோட்டத்திற்கு எந்த வகை யிலும் நியாயம் சேர்க்காத காட்சிகளே நிறைந்து கிடக்கின்றன. தவிர, 'இது ஏன் இப்படி சம்பந்தமே இல்லாம நடக்குது' நிறையக் கேள்விக ளையும், லாஜிக் மீறல்களையும் எழுப்பி விடு கிறது. ஆனால், இது எல்லாவற்றுக்கும் சேர்த்து நம்மை ஆச்சரியப் படுத்தி விடுகிறது படத்தின் கடைசி ஒரு மணி நேரம். முதல் பாதியில் லிமி டட் எடிஷன் போல அருள்நிதிக்கு குறைந்த காட்சிகளே ஒதுக்கப் பட்டிருக்கின்றன என்றா லும் இரண்டாம் பாதியில் மிரட்டி விடுகிறார்.





பொலீஸ் கட்டிங், கம்பீர மான உடல், வலிந்து சிரிக்கத் தெரியாத உடல்மொழி என தனது வழக்கமான நடிப்பை இந்தப் படத்திலும் பதிய வைக்க அவர் தவறவில்லை. அறிமுக நாயகி யாக நடித்திருக்கும் பவித்ரா மாரி முத்து நடிப்பில் தேர்ச்சி பெறுகிறார். ஆனால், அறிமுகக் காட்சியில் பொலிஸ் என 'கெத்து' காட்டுவதற்காக காவல் நிலையத் தில் வைத்து குற்றவாளியை அடிக்கும் அவர், 5 பேர் ஒன்று சேரும்போது ஹீரோவின் உதவியை நாடுகிறார். பெண்களைக் காக்க எப்போதும் நாய கர்கள்தான் மீட்பர்களாக வர வேண் டுமா இயக்குநர் இன் னிசை பாண் டியன் அவர்களே? (பெண்கள் போலீ சாகவே இருந்தாலும்). ஜெயப்பிர காஷ், சாரா, தனம் உள்ளிட்ட பலரும் கதா பாத்திரத்திற்குத் தேவையான நடிப்பை வெளிப் படுத்தியுள்ளன்னர்.

மெதுவாக நகரும் திரைக்கதையில் இடை வேளையில் வரும் திருப்பம், இரண்டாம் பாதி ட்விஸ்ட்டுகள் வேகமெடுக்க உதவுகின்றன. குறிப் பாக பேருந்துக் காட்சிகள் முழுமையாக பார்வை யாளர்களை எங்கேஜ் செய்கின்றன. தற்போதைய கதாபாத்திரங்களை கடந்த காலங்களுடன் இணைத்திருந்த விதம் அதற் கான எழுத்து புதுமையாகவும், ஆழமாகவும் இருந்தது படத்தை வெகுவாக ரசிக்க வைத்தது. பேருந்தில் ஏறும் காதல் ஜோடிக்கு அதிலிருக்கும் பயணிகள் இணை ந்து திருமணத்தை நடத்திவைப்பது, அங்கு நடக்கும் சில மொக்கையான உரையாடல்கள் அயற்சி.

ஊட்டி, மேட்டுப்பாளையத்தின் குளிரையும், விபத் தின் வீரியத்தையும், குறிப்பாக இரண்டாம் பாதியில் பேருந்துக் குள்ளேயே நகரும் காட்சிகளில் கேமரா கோணங் களால் கண்களை கட்டிப்போடுகிறார் ஒளிப்பதிவாளர் அரவிந்த் சிங். இசையமைப்பாளர் ரான் ஈதன் யோஹான் பின் னணி இசை ஹாரர் காட்சிகளில் பயத்தை கூட்டிருக் கிறது.

மொத்தத்தில் இந்த 'டைரி'யில் எழுதப்பட் டுள்ள கடைசி சில பக்கங்களின் திரைக் கதையே அதன் எடையை கூட்டியிருக்கிறது. இறுதிப் பக்கங்களின் சுவாரஸ்யம், விறுவிறுப்புக்காக வும், அத்தோடு இறுதியில் வரும் பாடல் ஒன் றுக்காகவும் 'டைரி'யை படித்துவிடலாம்.




# கடவுள் தந்த சோதனை!

# லைகர்

தன் அப்பா தவறவிட்ட சாம்பியன் பட்டத்தை பெற முயற்சிக்கும் மகனின் போராட்டம்தான் 'லைகர்'. மிக்ஸ்ட் மார்ஷியல் ஆர்ட்ஸில் சாம்பியன் பட்டத்தை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் தன் சொந்த ஊரிலிருந்து கிளம்பி மும்பை வருகின்றார் விஜய் தேவரகொண்டா. அங்கே தன் தாய் ரம்யாகிருஷ்ணனுடன் சேர்ந்து தெருவோரத்தில் டீ கடை நடத்துகிறார். மார்ஷியல் ஆர்ட்ஸ் கலையில் புகழ்பெற்ற பயிற்சியாளரை சந்தித்து பயிற்சியில் இணையும் விஜய் தேவரகொண்டா வாழ்வில் அனன்யா பாண்டே குறுக்கிட சில பல பிரச்சினைக்குப் பின் இறுதியாக அவர் அந்தப் பட்டத்தை வென்றாரா? இல்லையா? (பார்வையாளர்களை கொன்றாரா?) என்பதுதான் படத்தின் மீதி திரைக்கதை.




லைகராக விஜய் தேவரகொண்டா. திக்கிப் பேசுவது, சிக்ஸ்பேக் கொண்டு மிரட்டுவது, வெறி கொண்டு ரிங்கில் எதிரிகளை அடித்து துவம்சம் செய்வது என படத்திற்கான அவரது உழைப்பு திரையில் தெறிக்கிறது. படத்திற்கு ஒரே பலம் அவர் மட்டுமே. மொத்தப் படத்தையும் தூக்கி சுமக்கும் அவரது சுமையை பகிர்ந்துகொள்ள இயக்குநர் கூடத் தயாராக இல்லை.

2கே கிட்ஸ் வார்த்தையில் சொன்னால் 'கிறிஞ்சு' நாயகியாக அனன்யா பாண்டே செய்யும் செயல்களை திரையரங்கில் ஏசியைத்

தாண்டி நம்மை சூடேற்றுகிறது. இயக்குநர் பூரி ஜெகன்னாத்துக்கு அவர் மேல் என்ன கோபமோ, மோசமான ரைட்டிங் மூலம் மொத்த கதாபாத்திரத்தையும் சீர்குலைத்திருக்கிறார்.

ரம்யா கிருஷ்ணன் தொடக்கத்தில் சில காட்சிகள் சிறப்பாக நடித்திருந்தாலும், படம் முழுக்க தேவையில்லாத எமோஷனுடன் கத்திக் கொண்டிருக்கிறார். பயிற்சியாளராக வரும் ரோனித் ராய் கதாபாத்திரம் ஆறுதல். உலகப் புகழ் பெற்ற அமெரிக்க பாக்ஸர் மைக் டைசனை விஜய் தேவரகொண்டாவிடம் அடிவாங்கும் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் போல கூப்பிட்டு வைத்து கலாய்த்திருப்பது வேதனை.(இதெல்லாம் அமெரிக்காகாரன் பாத்தா நம்ம என்ன நினைப்பான்?)



பூரிஜெகநாத் 'லைகர்' -ஐ படமாக எடுப்பதற்குப் பதிலாக மாஷப் வீடியோ வாக்கி கொடுத்திருக்கிறார். தொடக்கத்தில் ஒரு சண்டைக்காட்சி, பின்னர் நாயகிக்கு இன்ட்ரோ சாங்க், காதல், மீண்டும் ஒரு டூயட் என எல்லாவற்றையும் கட் செய்து ஜோடித்திருக்கிறார். பெயருக்கு ஒரு வில்லன், கண்டதும் காதலிக்கும் நாயகி, நோக்கமின்றி நகரும் திரைக்கதை, இதையெல்லாம் பொறுத்துக் கொண்டாலும், அடிக்கடி வந்து துன்புறுத்தும் பாடல்கள் என படத்தில் நிறைய சோதனைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.

படத்தில் முக்கியமான பிரச்சினைதான் எடுத்துக் கொண்ட கதைக்குக் கொஞ்சம்கூட நியாயம் சேர்க்காமல் நகர்வதுதான். மார்ஷியல் ஆர்ட் சாம்பியன்சிப்தான் கதை எனும்போது, அதைப்பற்றி எந்த நுணுக்கத்தையும் சொல்லாமல், அதன் நெளிவு, சுளிவுகளை பதியவைக்காமல், எந்தவித சுவாரஸ்யமுமில்லாமல் அடுத்தடுத்த ரவுண்டுகளை வென்று நாயகன் முன்னேறுவது 'எங்களை பார்த்தால் பாவமாக இல்லையா இயக்குநரே?' என கேட்க வைக்கிறது. விஜய் தேவரகொண்டா கூட எதிராளியை ஒரு கட்டத்தில் பாவம் பார்த்து அடிப்பதை நிறுத்திவிடுகிறார். ஆனால் இயக்குநர் பூரி ஜெகநாத்..?

எந்தவித கடுமையான பயிற்சிகளுமில்லாமல் நாயகன் எல்லாரையும் அடித்து துவம்சம் செய்கிறார். அதிலும் குறிப்பாக மகன் விஜய் தேவரகொண்டா வெற்றி பெற தாய் சொல்லும் தாரகமந்திரம் மெய்சிலிர்க்க வைக்கும். இதையெல்லாம் தவிர்த்துப் பார்த்தாலும், முழுக்க முழுக்க பெண் வெறுப்பு கொண்ட ஆண்மையவாத சினிமாவாக இயக்கியிருக்கிறார்கள். அதற்கு தானாக வந்து தலையை கொடுத்திருக்கிறார் அனன்யா பாண்டே.

மோசமான பெண் கதாபாத்திர வடிவமைப்பின் மூலம் தனது ஆண்மையவாத வெறியை தீர்த்திருக்கிறார் இயக்குநர். ஒரு கட்டத்தில் எதுவுமே ஓகே ஆகாது என நினைத்ததும் நாட்டுப்பற்றை கையிலெடுத்திருக்கிறார்கள். ஆனால் இறுதியில் அதுவும் கைவிட்டு நழுவியிருப்பது பரிதாபம்!

ஒரு காட்சியில் விஜய் தேவரகொண்டா எதிராளியின் கழுத்தை பிடித்து நெரிக்கிறார். ஆனால், எதிராளியால் எளிதாக கிவ் அப் (giveup) சொல்லி தப்பித்துக்கொள்ள முடிகிறது. ஆனால், படம் பார்க்கும் நமக்கு தான் அப்படியான வாய்ப்பு எதுவும் வாய்க்கப் பெறவில்லை.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781